வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 01.04.2024 திங்கட்கிழமை | இதழ் : 92 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## இலங்கை - இந்தியா இடையே பாலம்

# பிரதிநிதிகள் குழுவை அமைக்க இலங்கை அரசாங்கம் இணக்கம்!

கொழும்பு, ஏப். 01

**இலங்கை - இந்தியா இடையே பாலம் அமைப்பது தொடர்பான செயல்பாடுகளை முன்னெடுக்க வசதியாக பிரதிநிதிகள் குழு ஒன்றை அமைக்குமாறு இந்தியா விடுத்த கோரிக்கைக்கு இலங்கை இணங்கியுள்ளது.**

ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் புதுடில்லி சென்ற குழுவினர் இரு நாட்கள் நடத்திய சந்திப்பிலேயே இந்த இணக்கம் எட்டப்பட்டதாக இப்போது தெரிய வருகிறது.

2015ஆம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரிக் கும் இடையில் தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் பாலம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சு ஆரம்பமானது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, இது தொடர்பான பேச்சுகள் நடைபெறவில்லை. இந்த நிலையில், கடந்த வருடம் ஜூன் மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் மோடி சந்திப்பின்போது மீண்டும் பேச்சு எழுந்தது.

இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 11

# எரிபொருட்களின் விலை குறைப்பு!

## மண்ணெண்ணெய் ரூ. 12 குறைந்தது

கொழும்பு, ஏப். 01

எரிபொருட்கள் சிலவற்றின் விலைகள் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டன. எனினும், 92 ஒக்ரைன் பெற்றோல், ஒட்டோ டீசல் என்பவற்றின் விலைகளில் மாற்றமில்லை.

சுப்பர் டீசல் 72 ரூபாயால் விலை குறைக்கப்பட்டு லீற்றர் 386 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் 12 ரூபாய் குறைவடைந்து 245 ரூபாயாகவும் சுப்பர் பெற்றோல் எனப்படும் 95 ஒக்ரைன் ரக பெற்றோல் லீற்றருக்கு 7 ரூபாய் குறைந்து 440 ரூபாயாகவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேசமயம், 92 ஒக்ரைன் பெற்றோல் 371 ரூபாயாகவும் ஒட்டோ டீசல் 363 ரூபாயாகவும் முன்னர் போன்று விற்பனையாகும். (ஐ)

# ஜனாதிபதி தேர்தலை பிற்போடவே முடியாது

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள்

கொழும்பு, ஏப். 01

ஜனாதிபதி தேர்தலை பிற்போட முடியாதென தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகளான நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஆகியன தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலா, பாராளுமன்றத் தேர்தலா முதலில் நடைபெறும் என்பது தொடர்பில் குழப்பமான நிலைமைகள் நீடிக்கின்ற நிலையில், பாராளுமன்ற தேர்தல் முறைமை மாற்றமும் அமைச்சரவையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் தேர்தல் கண்காணிப்பு அமைப் புகள் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தன. 11

# தமிழ் அரசு கட்சியினரை சந்திக்கிறது அநுர தரப்பு

யாழ்ப்பாணம், பெப். 01

தேசிய மக்கள் சக்திக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையில் விசேட சந்திப்பு அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக அநுரகுமார திஸநாயக்க கூறியுள்ள நிலையிலேயே சுமந்திரன் எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“அடுத்த வாரம் அவர்கள் எம்மைச் சந்திக்கவுள்ளதாகக் கூறினார்.

“அவர்களோடு மட்டுமல்ல ஏனைய பல கட்சிகளுட னும் நிறைய சந்திப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. 11

# பொது செயலரை தெரிவதற்காக கூடுகின்றது ஐ. த. தே. கூட்டணி!

யாழ்ப்பாணம், ஏப். 01

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு புதிய பொது செயலாளரை தெரிவு செய்வதற்காக அந்தக் கட்சியினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கூடுகின்றனர்.

இந்தத் தகவலை கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டணியின் பொதுச் செயலாளராக இருந்த ஆர். ராகவன் இயற்கை எய்தியதையடுத்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதே இந்தக் கூட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த கூட்டத்தின் போது, ஜனநாயக கூட்டணியை மாவட்டந்தோறும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

விசேடமாக கூட்டணியின் கிளைகள் மறுசீரமைப்பு, புதிய அங்கத்துவம் சம்பந்தமான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன.

இதேநேரம், ஏலவே ஜனநாயக தமிழ்த் 11

# துன்னாலையில் சுற்றிவளைப்பு 30இற்கும் மேற்பட்டோர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 01

வடமராட்சியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 30இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவின் துன்னாலை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய விசேட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், வாள்வெட்டு, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என 30இற்கும் மேற்பட்ட ஆண், பெண் 11

# சகல பங்காளிக் கட்சிகளுடனும் ஐக்கிய மக்கள் சக்தி புரிந்துணர்வு

## வெள்ளிக்கிழமை கூட்டணி அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஏப். 01

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அனைத்துப் பங்காளி கட்சிகளுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. எனவே, எதிர்வரும் வெள்ளிக்கிழமை புதிய அரசியல் கூட்டணி அறிவிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியனவும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான 11

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள்

கொழும்பு, ஏப். 01

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றைய தினம் உயிர்த்த ஞாயிறு தின ஆராதனைகள் நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் நடைபெற்றன.

இதன்படி, ஆயிரத்து 873 தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு திருப்பலி மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

இதன்போது, 6 ஆயிரத்து 522 பொலிஸார், 11



# இன்றும் நாளையும் தாதியர் பணி நிறுத்தப் போராட்டம்!

கொழும்பு, ஏப். 01

இன்றும் நாளையும் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதியர்கள் 3 மணி நேரம் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தாதியர் கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு தீர்வு காணுமாறு கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹடவல தெரிவித்துள்ளார். (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

புலம்பெயர் வாழ்க்கை என்பது அனுபவித்தவர்களால் மாத்திரமே புரிந்துகொள்ளக் கூடியது. புலம்பெயர் நாட்டிலிருந்து ஒலிபரப்பான வானொலி ஒன்றின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவரை அண்மையில் சந்தித்தபோது அவர் கூறிய சம்பவம் ஒன்று இப்போது நினைவுக்கு வருகின்றது.

தமது வானொலியில் ஒரு நிகழ்ச்சி 'உறவுப்பாலம்' என்ற தலைப்பில் ஒளிபரப்பாகியதாம்.

அதில், புலம்பெயர்ந்து வாழும் ஒருவர் தனது நண்பர் ஒருவரையோ அதிகம் ஏன் உறவினர்களைக்கூட அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்கள் தமது நண்பர்களை உறவுகளைத் தேடும் நிகழ்ச்சி அது. தொலைபேசி வழியே நிகழ்ச்சியில் இணைந்து கொள்பவர் தான் தேடுபவர் பற்றிய விவரங்களைக் கூறுவார். அதனை கேட்டுக் கொண்டிருக்கின்ற யாராவது இவர் தேடுகின்றவர்களை தெரிந்திருந்தால் உடனேயே அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு (தொலைபேசி வழியாக) அவர் பற்றிய தகவல்களை சொல்லாம். இதுவே அந்த நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சி ஊடாக பாடசாலைகளில் படித்த தமது நண்பர்கள், தமக்கு கற்பித்த ஆசிரியர்கள் என்று பலரையும் பலர் தேடிக்கண்டுபிடித்து உறவாடி வருகின்றனராம்.

ஒரு நாள் கனடாவிலிருந்து ஒருவர் தொடர்புகொண்டு தனக்கு முதலாம் வகுப்பில் படிப்பித்த அந்த ஆசிரியையை தன் வாழ்நாளில் ஒரு தடவை யாவது பார்க்கவேண்டும் என்று ஆவலாக இருக்கிறேன் என்று அந்த ஆசிரியையின் விபரங்களையும் கூறி, அவர் கதைத்துக் கொண்டிருந்தபோது மறு தொலைபேசி அழைப்பில் அந்த ஆசிரியை நிகழ்ச்சியில் இணைந்துகொண்டுவிட்டார்.

இருவரும் மகிழ்ச்சி கலந்த அதிர்ச்சியில் கதைக்க முடியாமல் திண்டாடிவிட்டு, கதைக்க தொடங்கினர். ஆசிரியையும், கடந்த பத்து வருடமாக கனடாவில்தான் வசித்து வருவது பற்றியும் தான் எங்கே இருக்கிறார் என்பது பற்றியும் சொல்லியபோது அவரின் மாணவன் சொன்னார், "ஐயோ ரீச்சர் நீங்கள் இருக்கிற அதே அப்பார்ட்மண்டிலைதான் நானும் பதினைஞ்சு வருசமாக இருக்கிறன்." என்று.

இந்தக் கதையை ஏன் சொல்கிறேன் என்றால், புலம்பெயர் வாழ்க்கை என்பது எத்தகையது என்பதை சொல்வதற்காகவே. புலம்பெயர் மண்ணில் ஒரு கலை நிகழ்ச்சியோ அல்லது அரசியல் நிகழ்ச்சியோ நடைபெறுகின்றது என்றால் அதனை பார்ப்பதற்காக செல்வதைவிட, அங்கு வரும் தமது நண்பர்களை சந்திக்கவும் அவர்களோடு சில மணிநேரங்களை செலவிடுவதற்காகவும் செல்பவர்களே அதிகம்.

அண்மையில், கனடாவுக்கு சென்றிருந்த தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் ஜே. வி. பி. தலைவருமான அநுரகுமார திஸநாயக்காவின் சந்திப்புக்கு மண்டபம் நிரம்பிய மக்கள் கூடியிருந்தனர். சுமார் ஆயிரம் பேரில் அறுநூறுக்கு அண்ணளவானவர்கள் தமிழர்கள். மிகுதிப்பேர் சிங்கள சகோதரர்கள்தான். அவர்கள் ஜே. வி. பியின் ஆதரவாளர்களா அல்லது நான் மேலே சொன்னதுபோல கூடியவர்களா என்பது தெரியவில்லை. ஆனால், எண்பதுகளில் ஜே. வி. பி. இயக்கத்துக்கு எதிராக சிறீலங்கா அரசு, அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டபோது அதன் ஆதரவாளர்கள், போராளிகள் என்று பலரும் புலம்பெயர்ந்திருந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களில் கணிசமான அளவினர் இப்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் மிக உச்ச நிலையில் அங்கு வாழ்பவர்கள் அதிகம். அதனால் அங்கு வந்திருந்தவர்களில் கணிசமானவர்கள் ஜே. வி. பியின் ஆதரவாளர்களாகவும் இருக்கலாம்.

மண்டபம் நிரம்பிய மக்கள் கூட்டத்தைக் கண்டதும் தோழர் அநுர சற்று உணர்ச்சிவசப்பட்டு விட்டார் என்றே அந்தக் கூட்டத்தை பற்றி அறிகின்றபோது தெரியவந்தது.

நேற்றைய ஈழநாடுவில் 'பனங்காட்டான்' எழுதிய கட்டுரையில் அந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழர்கள் அநுரவின் பேச்சை தமிழில் கேட்பதற்கு வசதியாக போனில் தரவிறக்கம் செய்ய ஒரு செயலி அறிமுகம் செய்யப்பட்டிருந்ததாம். அதாவது மொழிபெயர்ப்பு தேவையானவர்கள் அந்த செயலி மூலம் அவரது உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை கேட்க வசதி செய்யப்பட்டிருந்தது.

ஆனால், அவர் பேசத் தொடங்கியதுமே, அது 'மக்கர்' பண்ணத் தொடங்கிவிட்டது. இதனால் அவரின் பேச்சை கேட்க விரும்பிய தமிழர் ஒருவர் எழுந்து நின்று செயலி வேலை செய்யவில்லை என்றும் இதனால் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யுங்கள் எனவும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அதற்கு மேடையிலிருந்த ஒருவரிடமிருந்து வந்த பதில், 'எலியட்ட தாண்ட' என்பதே. அதாவது தமிழ் மொழிபெயர்ப்பை கோரியவரை மண்டபத்துக்கு வெளியே போகச் சொல்லியிருக்கிறார். ஆனால், அதனை மிக அமைதியாக பார்த்துக்கொண்டு கடந்து போயிருக்கிறார் நமது அநுரகுமார.

ஆகக்குறைந்தது, தமிழ் மொழிபெயர்ப்பு வழங்க முடியாததற்கு மன்னிப்புக்கூட கேட்கவில்லை என்பது அவரும் 'இவர்தான்' என்பதையே வெளிப்படுத்துகின்றது.

எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரும் அநுர, தனது பேச்சுக்கு இங்காவது மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்வார் என்று நம்புவோம்.!

**- ஊர்க்குருவி.**



தந்தை செல்வாவின் 126ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் 'ஈழநாடு' செய்தி ஆசிரியர் இ. தேவராஜன், டான் செய்திகள் தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் இ. நிர்மல் ஆகியோர் தந்தை செல்வா விருது வழங்கி நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

## சஜித் வீட்டுக்கு செல்ல ஜனாதிபதி ஆர்வம்!

கொழும்பு, ஏப். 01

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தனிப்பட்ட இல்லத்துக்கு செல்வதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் - ஜலானிக்கு சமீபத்தில் பிறந்த பெண் குழந்தையைப் பார்ப்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு சம்மதம் தெரிவிக்க சஜித் பிரேமதாஸ தயக்கம் காட்டி வருகிறார் என்று கூறப்படுகின்றது. அரசியலில் சஜித் தரப்புக்கு பாதகத்தை ஏற்படுத்தி விடலாம் என்பதாலேயே இந்தத் தயக்கம் என்றும் கூறப்படுகின்றது.

(ஐ)

## தோட்டக்கிணற்றிலிருந்து முதியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 01

புன்னாலைக்கட்டுவனில் தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

அதே பகுதியை சேர்ந்த சின்னத்துரை தவராசா (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்ட வயது முதிர்ந்த குடும்பஸ்தரை காணவில்லை என்று உறவினர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நிலையிலேயே இந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சடலம் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

(ஐ)

# பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய இருவர் கைது

கொழும்பு, ஏப். 01

கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரபல விடுதி ஒன்றுக்கு அருகில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் இரு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பத்தரமுல்லை அலுவலகத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிளான பொலிஸார் சாரதி ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் சமூக பிரிவின் பொறுப்பதிகாரியும் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி ஒருவருமே இவ்வாறு சோதனை மேற்கொண்டபோது சந்தேக நபர்களால் இடையூறுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதன்போது இவர்களுக்கு இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதையடுத்து கான்ஸ்டபிள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## சேவை நயப்பு விழா

வடமராட்சி, பெப். 01

வடமராட்சி - உடுத்துறை மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் வீரகத்தி இந்திரலிங்கத்தைக் கௌரவிக்கும் சேவை நயப்பு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உடுத்துறை மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் கணபதிப்பிள்ளை திரவியகுமார் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமாகும். நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை சமூகத்தினரால் விழா நாயகன் கௌரவிக்கப்படுவார்.

அதனைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை வடக்கு மாகாணப் பிரதி கல்விப் பணிப்பாளர் நா. கந்ததாசன், வடமராட்சி முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் இ. ரவீந்திரன், முன்னாள் அதிபரும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான அ.சா. அரியகுமார், வவுனியா வெளிக்குளம் மகா வித்தியாலய அதிபர் பா.நேசராஜா ஆகியோர் ஆற்றுவார்கள்.

(ஐ-02)

## சந்திரசேகரப் பிள்ளையாருக்கு இன்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஏப். 01

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை கைலாசவாகன திருவிழாவும் 13ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் அடுத்தநாள் 14ஆம் திகதி சித்திரை வருடப் பிறப்பு தினமான ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ஐ)

## 10 இலட்சம் பேர் புதிய வாக்காளர்!

கொழும்பு, ஏப். 01

2024ஆம் ஆண்டு புதிய வாக்காளர்களாக 10 இலட்சம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம், நாட்டின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை ஒரு கோடியே 70 இலட்சமாக அதிகரித்துள்ளது.

- இந்தத் தகவலை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த ஆண்டின் இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தி முடிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu — 01.04.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இரா. சம்பந்தனா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஆலோசனையைதான் ஆதரிக்கவில்லை என்றும் அந்த நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு ஆதரவு இருக்கின்றதா அல்லது இல்லையா என்பது ஒரு பொது வேட்பாளரை நிறுத்திய பின்னர்தான் அறிய முடியும் - எனவே, அது தொடர்பான முன்கூட்டிய கணிப்புகள் அர்த்தமற்றவை. இது தவிர, தமிழ் மக்கள் எவ்வாறான மனநிலையில் இருக்கின்றார்கள் என்பதை சம்பந்தனால் எவ்வாறு அறிய முடிந்தது? ஏனெனில், சம்பந்தன் அவரின் சொந்தத் தொகுதியான திருகோணமலைக்கு கடந்த மூன்று வருடங்களாக செல்லவில்லை. இது தொடர்பில் திருகோணமலை தமிழ் மக்கள் என்ன கருதுகின்றார்கள் என்பதையே சம்பந்தனால் அறிய முடியவில்லை.

சம்பந்தன் இவ்வாறு கூறினாரென செய்தியொன்று வெளியானதைத் தொடர்ந்து - சம்பந்தனால் இவ்வாறு கூறியிருக்க முடியுமா - அந்தளவுக்கு அவர் தெளிவாக இருக்கின்றாரா என்னும் கேள்வியே எழுந்திருக்கின்றது. ஏனெனில், அந்தளவுக்கு சம்பந்தன் அரசியல் விடயங்களிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றார். சம்பந்தன் தெளிவாக சிந்திக்கக்கூடிய நிலையில் இருந்திருந்தால் இலங்கை தமிழ் அரசு கட்சியை நீதிமன்றம் செல்ல விட்டிருக்கமாட்டார். சம்பந்தன் தெளிவான நிலையில் இருந்திருந்தால் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவுக்கான போட்டியும் நடைபெற்றிருக்காது.

தற்போதுள்ள நிலையில் சம்பந்தன் அரசியல் தீர்மானமற்ற ஒரு மனிதராகவே இருக்கின்றார். அவரின் கருத்துகளை செவிமடுக்கும் நிலையில் அவரின் கட்சியும் இல்லை - மக்களும் இல்லை. இதனை கருத்தில் கொண்டுதான், சம்பந்தனின் கருத்துகளை நோக்க வேண்டும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்களை, மக்கள் மனு - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவே முன்னெடுத்திருந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் அரசு கட்சியின் ஏகோபித்த ஆதரவை பெற்று வெற்றி பெற்றிருந்த (அது தற்போது நெருக்கடியில் இருக்கலாம்) சிவஞானம் சிறீதரன் உட்பட ஏனைய கட்சிகளின் தலைவர்களும் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால், இந்த விடயத்தை முன்கொண்டு செல்வதற்கான செயல்பாடுகள் எவையும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

மக்கள் மனு சிவில் சமூகம் விடயத்தை பேசு பொருளாக்கும் கருமங்களையே முன்னெடுத்து வருகின்றது. அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்தித்தால் மட்டுமே, இந்த விடயம் சாத்தியப்படும் இல்லாவிட்டால் தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு ஒரு தோல்வியடைந்த நிலைப்பாடாகவே இருக்கும்.

ஆனால், தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் என்பது இயலாத காரியமல்ல - முயற்சித்தால் சாத்தியப்படுத்தக்கூடிய விடயம்தான். இவ்வாறானதொரு முயற்சி தென்னிலங்கையில் இனவாத சக்திகளை கிளர்ந்தெழச் செய்யும் என்று கூறும் வாதங்கள் அர்த்தமற்றவை ஏனெனில், இவ்வாறான முயற்சிகள் இல்லாவிட்டாலும்கூட, தென்னிலங்கையின் கடும்போக்கு தரப்புகள் அமைதியடைந்து விடப்போவதில்லை. என்பது பொருளல்ல. அவர்கள் தேவைப்படும்போது, வெளியில் தமிழர் விரோத நிலைப்பாட்டோடு முகம் காட்டுவதை எவராலும் தடுக்க முடியாது. அது இலங்கைத் தீவின் ஓர் அரசியல் போக்கு.

சம்பந்தன் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடானது ஒருவேளை, அவர்களின் தனிப்பட்ட ஈடுபாடுகளுக்கு முரணாக இருக்கலாம். அதனால் அவர்களில் சிலர் இதனை வெளிப்படையாக ஆதரிக்கத் தயங்கலாம். அதற்காகத் தமிழ் பொது வேட்பாளர் எண்ணக்கரு தவறானதல்ல. அது பரிசோதிக்கக் கூடியதுதான்.

# தந்தை செல்வா ஜனன தினம் அவரின் நினைவிடத்தில் அஞ்சலி!

*யாழ்ப்பாணம், ஏப். 01*

தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் தந்தை செல்வா நினைவிடத்தில் தென்னிந்திய திருச்சபையின் ஓய்வு பெற்ற பேராயர் ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அவரின் சதுக்கத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வட மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், கட்சியின் உப செயலாளர் குலநாயகம் உட்பட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# தந்தை செல்வா ஜனன தினமும் விருது வழங்கும் நிகழ்வும்!

*யாழ்ப்பாணம், ஏப். 01*

தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனன தின விழாவும், விருது வழங்கும் நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.



வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில், சுழிபுரம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் இருந்து விருந்தினர்கள் மற்றும் விருது பெறுபவர்கள் பாரம்பரிய முறைப்படி மேளதாளங்களுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் ஊடகத்துறையை சேர்ந்த ஈழநாடு பத்திரிகையின் செய்தி ஆசிரியர் இ. தேவராஜன், டான் செய்திகள் தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் இ. நிர்மல், தீம்புனல் வார இதழ் ஆசிரியர் ஏ. ரவிவர்மா, சக்தி தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் வி. கஜீபன், யாழ். தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியர் க. ஹம்சனன் ஆகியோருக்கும் மற்றும் மருத்துவதுறை மற்றும் சமூக சேவை உள்ளிட்ட பல துறைகளில் சாதித்த 20 பேர் “தந்தை செல்வா விருது” வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 200 பேருக்கு கண்ணாடி வில்லைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி:

# மாணவர்கள், ஆசிரியர்களிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு

*யாழ்ப்பாணம், ஏப். 05*

இல்ல மெய்வன்மை போட்டியில் கார்த்திகை பூ, யுத்த டாங்கி வடிவில் இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டமை தொடர்பில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்களிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இல்ல மெய்வன்மை போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், கார்த்திகைப் பூ வடிவிலும், போர் டாங்கி வடிவிலும் இல்ல அலங்கரிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த இல்ல அலங்காரங்கள் தொடர்பில் விசாரணைக்கு வருமாறு தெல்லிப்பழை பொலிஸார் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதன்படி, நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு ஆசிரியர்களும் மாணவர்களும் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெற்ற பின்னர் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 01 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 19
நல்ல நேரம் : 12.11 - 01.41
ராகு காலம் : 07.41 - 09.11
திதி : சப்தமி




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

**இடபம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை கைகூடி வரும். ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
உங்களை சுற்றி இருப்பவர்களை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள்.

**கடகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். தாயாருடன் மனஸ்தாபம் வந்து நீங்கும்.

**கன்னி**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவால்கள் விவாதங்களில் வெற்றிபெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி தங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். பணம் நகையை கவனமாக கையாளுங்கள்.வழக்கில் நல்ல தீர்ப்பு வரும்.

**தனுசு**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலரால் தர்ம சங்கடமான சூழ்நிலை வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**மகரம்**
தையும் சாதிக்கும் துணிச்சல் வரும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**கும்பம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். வீடு வாக னத்தை சீர் செய்வீர்கள். திடீர் பயணங்களால் பயனடைவீர்கள். சாதிக்கும் நாள்.

**மீனம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலரால் தர்ம சங்கடமான சூழ்நிலை வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

# காங்கிரஸ் கட்சியை அழிப்பதன் மூலமாக மாநில கட்சிகளை ஒழிக்க பா. ஜ. க. திட்டம்!

காரைக்குடி, ஏப். 01

தேசிய கட்சியான காங்கிரஸை அழித்துவிட்டு மாநிலக் கட்சிகளை ஒழித்துவிடலாம் என பா. ஜ. க., ஆர். எஸ். எஸ். கருதுகின்றன என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

“மூன்றாவது முறையாக மோடி பிரதமரானால், இதுதான் கடைசித் தேர்தலாக இருக்கும். இந்தியாவில் அடுத்து தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கை இல்லை. அந்தளவுக்கு பா. ஜ. க. அரசு சர்வாதிகாரப் பாதையில் செல்கிறது.

தி. மு. க. உள்ளிட்ட மற்ற கட்சிகள் வலிமையாக இருந்தாலும், அவை மாநிலக் கட்சிகள் தான். தேசிய அளவில் பா. ஜ. கவை எதிர்ப்பது காங்கிரஸ் மட்டுமே. இதனால்தான் காங்கிரஸ் அல்லாத பாரதம் என்று பா. ஜ. க. கூறிவருகிறது. அறக் கட்டளையைப் போன்று அரசியல் கட்சிக்கும் வருமான வரி விலக்கு உண்டு. இதனால் வரி கட்டியது கிடையாது.

ஆனால், காங்கிரஸின் வங்கிக் கணக்கை முடக்கியதுடன், வருமான வரி, அபராதம் என்று ரூ.1,821 கோடி செலுத்தக் கோரி அறிவித்தல் அனுப்பியுள்ளனர். தற்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அறிவித்தல் அனுப்பியுள்ளனர். அடுத்து மற்ற கட்சிகளுக்கும் அறிவித்தல் வரும். இது அனைத்துக் கட்சிகள் மீதான தாக்குதலாகும்.

தேசியக் கட்சியான காங்கிரஸை அழித்து விட்டால் மாநிலக் கட்சிகளை ஒழித்து விடலாம் என பா. ஜ. க., ஆர். எஸ். எஸ். ஆகியவை கருதுகின்றன. ஒரே நாடு ஒரே தேர்தல் ஒரே கட்சி, ஒரே தலைவர் என்பதே பா. ஜ. கவின் குறிக்கோள். அதுவும் மோடி மட்டும்தான். அவர்தான் வாழ்நாள் முழுவதும் தலைவராக இருக்க வேண்டும் என்பதே பாஜகவின் நோக்கம் - என்று கட்சிக் கூட்டம் ஒன்றில் அவர் கூறினார்.

# மொழியை வைத்து அரசியல் செய்யும் அவசியம் பிரதமர் மோடிக்கு இல்லை

## அண்ணாமலை சொல்கிறார்

சென்னை, ஏப். 01

மொழியை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் பிரதமர் மோடிக்கு இல்லை என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தாய்மொழியாக தமிழ் எனக்குக் கிடைக்காதது வருத்தம் அளிப்பதாக பிரதமர் மோடி கூறியதை முதல்வர் ஸ்டாலின் விமர்சித்திருந்தார். இந்நிலையில், பா. ஜ. க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை, தனது எக்ஸ் தளத்தில் அளித்துள்ள பதிலில் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 70 ஆண்டுகளாக, தமிழ் மொழியை வியாபாரமாக்கி தமிழகத்தைச் சுரண்டிய திமுகவின் தமிழுணர்வு நாடகத்தை, தமிழக மக்கள் இனியும் நம்புவார்கள் என்று முதல்வர் ஸ்டாலின் நினைப்பாரேயானால், அவருக்கு ஏமாற்றமே பரிசாகக் கிடைக்கும்.

தி. மு. கவினரைப் போல, மறைந்த தி. மு. க. தலைவர் கருணாநிதியைப் போல, ஸ்டாலினைப் போல, மொழியை வைத்து நடத்தும் வியாபார அரசியலை செய்ய வேண்டிய அவசியம் மோடிக்கு இல்லை.

இந்தியாவின் பிற மொழிகள் பேசுபவர்கள் மத்தியிலும், தமிழ் மொழிதான் தொன்மையான, இனிமையான மொழி என்று அவர் பெருமையுடன் கூறி வருகிறார்.

உலக நாடுகளின் தலைவர்களை தமிழகத்துக்கு அழைத்து வந்து, தமிழகத்தின் தொன்மையான கலாசாரத்தை பறைசாற்றியிருக்கிறார்.

எனவே, உண்மையிலேயே ஸ்டாலினுக்கு, தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால், தேசியக் கல்விக் கொள்கையை தமிழகப் பள்ளிகளில் அமுல்படுத்தி, தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளும், கட்டாயமாக தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை வழங்க வேண்டும் என்றுள்ளது. (ஐ)

# மீன்பிடிப்பதற்கு சுதந்திரம் இல்லாத நிலையில் தமிழர்

## நாம் தமிழர் சீமான்

இராமநாதபுரம், ஏப். 01

மீன்பிடிக்க சுதந்திரம் இல்லாத நிலையில் தமிழர்கள் உள்ளனர் என்று நாம் தமிழர் கட்சியின் சீமான் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் பிரசார கூட்டத்தில் பங்கேற்ற அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழர்கள் சாதி, மதம், கடவுள் உணர்ச்சிகளில் ஊறிப்போய் கிடக்கின்றனர். அந்த உணர்வுகளில் இருந்து வெளியே வந்தால் வெற்றி பெறலாம். பிரதமர் மோடி தேர்தல் வந்தால் மக்களை சந்திக்க வருவார். பா.ஜ., கட்சிக்கு கிறிஸ்தவர், முஸ்லிம்களை எதிர்ப்பதே கொள்கை.

இந்தியாவை காப்பாற்ற வருகிறேன் என்கிறார் ஸ்டாலின். தமிழர்களிடம் வாக்குகளை வாங்கி தமிழர்களைப் பற்றி கவலைப்படவில்லை. 840 மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். மீன்பிடிக்க கூட சுதந்திரம் இல்லாத நிலையில்தான் தமிழர்கள் இருக்கின்றனர் - என்றார். (ஐ)

# திருமாவுக்கு ‘பானை’ துரைக்கு ‘தீப்பெட்டி’

சென்னை, ஏப். 01

மக்களவைத் தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருச்சி தொகுதியில் போட்டியிடும் ம. தி. மு. க. வேட்பாளர் துரை வைகோவுக்கு தீப்பெட்டி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளன.

மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கட்சித் தலைவர் திருமாவளவன் சிதம்பரம் தொகுதியிலும் பொதுச் செயலாளர் துரை. ரவிக்குமார் விழுப்புரம் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

இந்தக் கட்சி பானை சின்னத்தை தமக்கு ஒதுக்குமாறு விடுதலை சிறுத்தைகள் கட்சி கோரியது. ஆனால், இதை ஏற்க தேர்தல் ஆணையம் மறுத்து விட்டது. இதைத் தொடர்ந்து, அந்தக் கட்சி நீதிமன்றத்தை நாடியது. இந்த நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு பானை சின்னம் ஒதுக்கப் பட்டுள்ளது.

இதேபோன்று, திமுக கூட்டணியில் திருச்சி தொகுதியில் ம. தி. மு. க. சார்பில் வைகோ மகன் துரை வைகோ போட்டியிடுகிறார். இவருக்கு பம்பரம் சின்னம் மறுக்கப்பட்ட நிலையில், தீப்பெட்டி சின்னம் வேண்டும் என்று கேட்டிருந்தார். அதன்படி, அவருக்கு தீப்பெட்டி சின்னத்தை ஒதுக்கப் பட்டுள்ளது. (ஐ)

# சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்!

## பா. ம. க. வலியுறுத்து

சென்னை, ஏப். 01

ஸ்டாலினுக்கு சமூக நீதியில் உண்மையாகவே அக்கறை இருந்தால் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கி விட்டு தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் - என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

சமூக நீதி பேசும் மருத்துவர் ராமதாஸ், சமூக நீதிக்கு எதிரான பா. ஜ. கவுடன் கைகோத்த மர்மம் என்ன? மனசாட்சி உள்ள பா. ம. க. தொண்டர்கள்கூட ஜீரணிக்க முடியாமல் வேதனையோடு உள்ளனர்” முதல்வர் ஸ்டாலின் கூறியிருந்தார்.

இதற்கு பதிலடியாக, “பிற சமூகங்களின் கோரிக்கைகளைக் கேட்டுக் கேட்டு நிறைவேற்றும் மு. க. ஸ்டாலினுக்கு வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்கு மட்டும் மனம் வரவில்லை. ஸ்டாலினுக்கு சமூக நீதியில் உண்மையாகவே அக்கறை இருந்தால் வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கிவிட்டு, தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும்” என்று கூறியுள்ளார். (ஐ)

# ஆட்சி முறைமை மாற்றமே நாட்டின் இப்போதைய தேவை

## மன்னார் ஆயர் இமானுவல் பெர்னாண்டோ

மன்னார், ஏப். 01

**மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் எமது ஆட்சி முறைமையில் மிகப்பெரிய மாற்றம் தேவை என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இமானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தினத்தையொட்டி அவர் வெளியிட்ட ஆசி செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உயிர்ப்பு ஞாயிறு என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் மறை உண்மையும், மையமும் ஆகும்.

நமது நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள வேளையில் இந்த ஆண்டு ஈஸ்டர் பண்டிகையை நாம் கொண்டாடுகிறோம்.

எமது மக்கள் எதிர் கொள்ளும் பெரும் சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் நிரந்தர தீர்வு காண வேண்டுமாக இருந்தால் எமது ஆட்சி முறைமையில் பெரும் மாற்றம் தேவை. அதற்காக பாடுபடுவது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும்.

இந்த நேரத்தில் எமக்கு தெய்வீக இறை தலையீடு தேவையாக உள்ளது. எனவே, நாம் இருக்கும் ஆபத்தான சூழ்நிலையில் இருந்து நம்மை விடுவிக்க இந்த ஈஸ்டர் காலத்தில் உயிர்த்த இயேசுவிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

இந்த ஆண்டு ஈஸ்டர் பண்டிகை கத்தோலிக்க மற்றும் பிற கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபடச் சென்றோர் மற்றும் வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலின் ஐந்து ஆண்டுகள் நிறைவை குறிக்கின்றது. 2019ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 273 பேர் கொல்லப்பட்டதோடு, குறைந்தது 500 பேர் வரை காயமடைந்தனர்.

இந்த தாக்குதல்கள் நடந்து சரியாக 5 வருடங்கள் கடந்துள்ள போதும் இந்த தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட போதிலும் நாங்கள் இதுவரை உண்மையை அறிய முடியவில்லை.

ஈஸ்டர் அனுபவம் எதிர்காலம் மட்டில் உள்ள நிச்சயமற்ற நிலையில் நம்பிக்கையளிக்கிறது. தாய் நாட்டின் இந்த இருள் சூழ் நேரத்தில் உயிர்த்த இயேசுவின் ஒளியால் நாம் அறிவொளி பெறுவோம் - என் றுள்ளது. (ஐ)

காணி உறுதி மோசடி வழக்கு:

# பொலிஸார் இருவருக்கு எதிராக சட்டத்தரணி வழக்குத் தாக்கல்!

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் சிலர் காணி உறுதி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று எழுந்த சர்ச்சை விவகாரத்தில் புதிய திருப்பமாக சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் சமர்ப்பணம் மேற்கொண்ட பொலிஸாருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

காணி உறுதி மோசடியில் சம்பந்தப்பட்டதாக பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்ட யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்த சட்டத்தரணி ஒருவரே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். காணி உறுதி மோசடி வழக்கில் இந்த சட்டத்தரணி நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றுள்ளார்.

காணி உறுதி மோசடியில் சம்பந்தப்பட்டதாக குறிப்பிட்டு சட்டத்தரணி ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தர். நொத்தாரிசுகள் உள்ளிட்ட சிலர் மீது பொலிஸார் காணி உறுதி மோசடி குற்றச்சாட்டு சுமத்தியிருந்தனர். இந்த விவகாரங்கள் தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

பொலிஸாரால் கைது செய்யப்படலாமென்ற சூழலில், யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன் பிணை கோரியிருந்தார்.

இந்த சட்டத்தரணி சார்பில், எம். ஏ. சுமந்திரன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி பிணை கோரியிருந்தார். நீதிமன்றம் முன் பிணை வழங்கியது.

இந்த வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் தரப்பில் சமர்ப்பணங்களை முன்வைத்த போது, தெரிவித்த கருத்துக்கு எதிராக புதிதாக அறிமுகமான நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின் கீழ், இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சட்டத்தரணி குருபரன் குமரவடிவேல் ஊடாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படுகின்றது. (ஐ)

# செபஸ்தியார் பேராலயத்தில் உயிர்த்த ஞாயிறு பெருவிழா!

மன்னார், ஏப். 01

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலி நடந்த போது ஆலயத்தை சூழ பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி நடைபெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பும் ஏற்பாடாகியிருந்து.

இதேபோன்று, மன்னார் மாவட்டத்தில் நேற்று காலையும் உயிர்த்த ஞாயிறு தின திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. (ஐ)





# 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சனியன்று மக்கள் பாவனைக்கு!

கிளிநொச்சி, ஏப். 01

வடக்கு மாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத் தவும் அந்தப் பிரதேச மக்களின் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் ஏப்ரல் 6 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது .

வவுனியா மாவட்டத்தில் 6 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் திறக்கப்படவுள்ளன நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவை வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா வடக்கு, வெங்கலச்சிக்குளம், வவுனியா தெற்கு பிரதேச ஆகிய செயலாளர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி, கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

"அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்" என்ற அரசாங்கத்தின் எண்ணக் கருவின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின்படி அந்த அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவு சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது.

2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன. இதன் மொத்த திட்ட மதிப்பு 211 மில்லியன் ரூபாவாகும். முன்னதாக, கடந்த ஆண்டு இறுதியில், முதல் கட்டமாக, 26 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 16,480 குடும்பங்கள் பயனடைவார்கள்.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டவை என்று மீள்குடியேற்ற பிரிவு தெரிவிக்கிறது. (ஐ)

# பெண்ணின் சங்கிலியை அறுத்த திருடர்கள் இளைஞர்களின் சமயோசிதத்தால் சிக்கினர்!

கிளிநொச்சி, ஏப். 01

முகமாலையில் தங்க சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடிய திருடர்களை அந்தப் பகுதி இளைஞர்களின் சமயோசிதத்தால் பிடிபட்டனர்.

ஈஸ்டர் தின நள்ளிரவு ஆராதனையில் பங்கேற்க நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு முகமாலை தேவாலயத்துக்கு சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றனர்.

இதை அவதானித்த இளைஞர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியதுடன், அவர்களை துரத்திச் சென்றனர். சங்கிலியை அறுத்துச் சென்றவர்களை ஆனையிறவில் மறித்த இராணுவத்தினர் அவர்களை பிடித்ததுடன், சங்கிலியையும் மீட்டனர்.

பளை பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்தனர். அத்துடன், துரிதமாக செயல்பட்ட இளைஞர்களுக்கு பல தரப்பினரும் பாராட்டுகளை தெரிவித்தனர். (ஐ)

# தொழிலாளர் தின கூட்டத்தோடு தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகும்!

கொழும்பு, ஏப். 01

**மே தின கூட்டத்தோடு தேர்தல் பிரசார நடவடிக்கையை முழுவீச்சுடன் முன்னெடுப்பதற்கு தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்து வருகின்றன.**

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன தற்போது தொகுதி கூட்டங்களையும், மகளிர், இளைஞர் மாநாடுகளையும் நடத்தி வருகின்றன. விமல் வீரவன்ச அணி, நிமல் லான்சா அணி என்பனவும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில், மே தினக் கூட்டத்தை மிகப் பிரமாண்டமாக நடத்திப் பலத்தைக் காட்டுவதற்கும் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

அடுத்து என்ன தேர்தல் என்பது தொடர்பான அறிவிப்பு தமிழ், சிங்கள புத்தாண்டு முடிந்த பின்னர் அதிகார பூர்வமாக வெளியாகும்.

முதலில், ஜனாதிபதித் தேர்தலே நடைபெறவுள்ளது. இதற்கான முடிவை ஜனாதிபதி எடுத்து விட்டார் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எனவே, மே தினக் கூட்டத்தைப் பிரமாண்டமாக நடத்தி, அன்று முதல் தேர்தல் பிரசாரத்தையும் தீவிரப்படுத்த கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கட்சிகளின் தொகுதி அமைப்பாளர்களுக்கு கட்சிகளின் தலைமைகள் அறிவித்துள்ளன. (ஐ)

# முட்டை ரூ. 35ஆக குறையும்

## அமைச்சர் மகிந்த அமரவீர

கொழும்பு, ஏப். 01

நடப்பு மாதத்தில் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாயாகக் குறைக்கப்படும் என்று விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உள்ளூர் கோழி முட்டை உற்பத்தி மொத்த தினசரி தேவையை விட அதிகமாக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சராசரியாக நாட்டில் ஒரு நாளைக்கு 65 இலட்சம் முட்டைகள் தேவை. உள்ளூர் கோழிப்பண்ணைகளில் முட்டை உற்பத்தி ஏற்கனவே 75 இலட்சத்தை தாண்டியுள்ளது என்று விவசாய அமைச்சு முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

மேலும், இந்த நாட்டில் அனைத்து கோழிப் பண்ணைகளிலும் உள்ள தாய் விலங்குகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 35 ஆயிரத்தைக் கடந்துள்ளது. அனைத்து கோழிப் பண்ணைகளிலும் குஞ்சுகளின் கொள்ளளவு 100 வீதத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது சந்தைகளில் முட்டையின் விலை 45-50 ரூபாயாக உள்ளது. (ஐ)

# 'தங்க அரிசி' வகையை சந்தைக்கு வெளியிட முடிவு

கொழும்பு, ஏப். 01

இலங்கையில் நுகர்வோரின் அரிசிக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரிசி வகை ஒன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்த அரிசி சந்தைப்படுத்தல் சபை தீர்மானித்துள்ளது.

சிவப்பு அரிசி வகை ஒன்றை தங்க அரிசி என்ற பெயரில் சந்தைக்கு வெளியிடவுள்ளதாக அதன் தலைவர் புத்திக இத்தமல்கொட குறிப்பிட்டுள்ளார்.

நெல் கொள்வனவு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் 37 நெல் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் இருந்து மாத்திரம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இன்னும் நெல் பெறப்படுகிறது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனையில் 10 மாடி கட்டடம் அமைக்க திட்டம்!

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப். 01

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 10 மாடிகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் நடக்கின்றன என்று மருத்துவமனையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தினமும் அதிகளவிலான நோயாளிகள் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை பெற்று வரும் நிலையில் விடுதிகளிலும் அதிகளவானோர் தங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்றனர். இட நெருக்கடி காரணமாக 10 மாடிகள் கொண்ட புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய கட்டடத்தை அமைப்பதற்கான வரைபடம் தயாரிக்கப்பட்ட நிலையில் அடுத்த கூட்டத்தில் அதனை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கிறேன்.

புதிய கட்டடத்தை கட்டுவதற்கு பெரும் நிதி செலவு செய்யவேண்டிய சூழ்நிலையில் எமது புலம்பெயர் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் ஒரு தளத்துக்கான முழுமையான செலவை வழங்குவதற்கான சாதகமான பதிலை வழங்கியுள்ள நிலையில் அவரைப் போன்று பலர் உதவி வழங்குவார்கள்.

அரசாங்கத்திடம் புதிய கட்டடத்துக்கு தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு வரி விலக்கைக் கோரி பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்டவர்களிடம் கலந்துரையாடியுள்ளோம்.

ஒரே தடவையில் 10 மாடிகளையும் கட்டி முடிக்காவிடினும் ஆகக் குறைந்தது 5 தொடக்கம் 6 மாடிகளையாவது கட்டி முடித்தால் இட நெருக்கடி குறைந்துவிடும்.

ஆகவே, புதிய கட்டடத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் தெரிவித்தார். (ஐ)

# ரூ. 1.6 இலட்சம் வருமானமீட்டும் வர்த்தகர்களுக்கு வரிக் கோப்பு

கொழும்பு, ஏப். 01

நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வருமானம் ஈட்டும் நாட்டிலுள்ள பெருமளவிலான வர்த்தகர்கள் வரிக் கோப்புகளைத் திறக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறப்படுகின்றது.

வற் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கான வருடாந்த வருமான வரம்பான 8 கோடி ரூபாயை 6 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 12 ஆயிரம் முதல் 13 ஆயிரம் வரையிலான வற் வரி கோப்புகள் உள்ளன. இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 50 ஆயிரத்தைத் தாண்டும் என்றும் அரசாங்கத்தின் வரித்துறை ஊகித்துள்ளது.

இந்த நிலையில் 6 கோடி ரூபாய் வருடாந்த வருமானம் ஈட்டும் அனைத்து நபர்களும் வரி செலுத்துவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புகையை வெளியேற்றும் வாகனங்கள்மீது நடவடிக்கை எடுக்க பொலிஸ் தவறிவிட்டது

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் சாடல்

கொழும்பு, ஏப். 01

நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நச்சுப் புகையை வெளியேற்றி வரும் நிலையில், இது தொடர்பாக வழக்குத் தொடரவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ பொலிஸார் தவறிவிட்டனர் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின்படி, மோட்டார் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாருக்கு நச்சுப்புகையை வெளியேற்றும் வாகனங்களை சோதனை செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இது தொடர்பாக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மோட்டார் போக்குவரத்து துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புகையை வெளியிடும் அரச வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்களுக்கு 2000 - 5000 ரூபாய்க்கு குறையாமல் அபராதம் விதிக்க முடியும் என்ற போதிலும் பொலிஸார் கவனம் செலுத்த தவறியுள்ளனர் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் குற்றஞ்சாட்டியுள்ளது.

# மீண்டும் பெரமுன கட்சியில் இணையும் குமார வெல்கம?

கொழும்பு, ஏப். 01

குமார வெல்கம மீண்டும் பொதுஜன பெரமுன கட்சியில் இணையத் தயாராகி வருகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான அவர் புதிய லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக உள்ளார்.

இந்த நிலையில், சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியில் அவர் இணையவுள்ளார். இது தொடர்பில், அவர் பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்‌ஷவுடன் உரையாடிய போதே இந்த விடயத்தை தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.



அத்துடன், தமிழ் - சிங்கள புதுவருடத்துக்கு முன்னைய பொதுக்கூட்டம் ஒன்றில் குமார வெல்கம பொதுஜன பெரமுன கட்சியில் சங்கமமாவார் என்று கூறப்படுகின்றது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்‌ஷவை பொதுஜன பெரமுன முன்னிறுத்தியதால் கட்சியிலிருந்து விலகினார். தற்போது, பொதுஜன பெரமுனவில் கோட்டாபய இல்லை என்பதால் மீண்டும் அவர் அந்தக் கட்சியில் இணையவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# முதலை கடித்து பெண் மரணம்!

கொழும்பு, ஏப். 01

ஆற்றில் நீராடச் சென்ற பெண் ஒருவர் முதலை கடித்து உயிரிழந்தார்.

குருநாகல் - மெகலே - கலங்குட்டிவ ஆற்றில் நீராடிய 66 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரதேசவாசிகள் முதலையிடமிருந்து பெண்ணை மீட்டு தம்புத்தேகம மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால், அவர் அங்கு உயிரிழந்தார். (ஐ)

# 'அஸ்வெசும' திட்டத்தால் சமுர்த்தி முடங்கியுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார

கொழும்பு, ஏப். 01

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அஸ்வெசும வேலைத்திட்டத்தால் முழு சமுர்த்தி திட்டமும் முடக்கப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திட்டத்தின் கீழ் இயங்கி வந்த சமூக பாதுகாப்பு நிதி, வீடமைப்பு கடன், கட்டாய சேமிப்பு நிதி என்பன தற்போது முற்றாக முடக்கப்பட்டுள்ளன. இதனால், சமுர்த்தி பயனாளிகளுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து நன்மைகளும் இழக்கப்பட்டுள்ளன.

16 இலட்சம் சமுர்த்தி பயனாளிகளில் 8 இலட்சம் பேரே அஸ்வெசும திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் எவரும் சமுர்த்தி சமூக பாதுகாப்பு திட்டத்துடன் இணைக்கப்படாததால் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு பணம் வரவு வைக்கப்படாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னணியில் இந்தியாவாம்

## மைத்திரி சி. ஐ. டிக்கு கூறினாரென தகவல்

கொழும்பு, ஏப். 01

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இந்தியாவே செயல்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குமூலம் வழங்கியுள்ளார்.**

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே அவர் இந்த வாக்குமூலத்தை வழங்கினார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு,

2019ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்தபோதே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தநிலையில், அண்மையில் கண்டிக்கு சென்ற மைத்திரி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் யார் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்ததாகக் கூறினார்.

அத்துடன், இது தொடர்பில் தாம் நீதிமன்றம் ஒன்றில் இரகசிய வாக்குமூலம் ஒன்றையே வழங்கமுடியும் என்றும் கூறியிருந்தார்.

எனினும், அதற்கு முன்னதாகவே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அவர் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. குறித்த வாக்குமூலத்தின்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பின்புலத்தில் இந்தியாவே செயல்பட்டதாக மைத்திரி கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தள விமான நிலையம் போன்ற திட்டங்கள் இந்தியாவுக்கு வழங்கப்படாமையாலேயே உயிர்த்த ஞாயி றுதாக்குதல் நடத்தப்பட்டதாக இந்தியாவின் இராஜதந்திரி ஒருவர் தம்மிடம் ஒப்புக்கொண்டார் என்றும் மைத்திரிபால தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பம் முதலே இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளதாக இந்திய புலனாய்வுப் பிரிவே இலங்கைப் புலனாய்வுப்பிரிவுக்கு தகவல் வழங்கியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதேநேரம், தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர், ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளே இதற்கு காரணம் எனவும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் மைத்திரிபால குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு வழங்கப்படும் தெளிவற்ற வாக்குமூலங்களுக்கு மத்தியிலேயே மாளிகாகந்தை நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 4ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதற்காக அழைத்துள்ளது.

இதேவேளை, மைத்திரிபால வழங்கும் வாக்குமூலத்தின் மூலம் உண்மை தன்மையை வெளி கொண்டு வர முடியும் எனவும் இது தொடர்பில் இந்திய அரசாங்கம் பதில் வழங்கவும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)




# உணவகத்தில் தீ விபத்து!

கொழும்பு, ஏப். 01

நுவரெலியா நகரில் அமைந்துள்ள உணவகமொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீ பரவல் ஏற்பட்டது.

அங்கிருந்த பொது மக்கள், பொலிஸார் மற்றும் நுவரெலியா நகரசபை தீயணைப்புப் பிரிவு இணைந்து முயற்சித்தில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீ விபத்தால் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. மின் விசிறியில் ஏற்பட்ட மிகசிவு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(ஐ)

# அண்ணனை கழுத்து அறுத்து கொன்ற தம்பி!

கொழும்பு, ஏப். 01

அண்ணனின் கழுத்தை அறுத்து கொன்ற தம்பியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கேகாலை - ருவன்வெல்ல - குடாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சகோதரர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதிலேயே தம்பி அண்ணனை கழுத்தறுத்து கொன்றார். இதில், அதே இடத்தைச் சேர்ந்த 42 வயது நபரே உயிரிழந்தார்.

அவரை கொன்ற குற்றச்சாட்டில் 40 வயதான தம்பியாரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



# 172 ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன

சிலாபம், ஏப். 01

வனஜீவராசிகள் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வந்த கடல் ஆமைக் குஞ்சுகள் நேற்று முன்தினம் இரவு சுற்றுலா பயணிகளால் கடலில் விடப்பட்டன.

புத்தளம் - கண்டகுழி கடற்கரையில் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்திருந்தனர்.

இந்த முட்டைகளில் இருந்து குஞ்சுகள் வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அவற்றைக் கடலில் விட்டனர். 172 கடல் ஆமைக் குஞ்சுகள் இவ்வாறு கடலில் விடப்பட்டன. அரியவகையான ( மஞ்சள் நிறச் சிற்றாமை வகையை சேர்ந்த ஆமைகளே சுற்றுலா பயணிகளால் இவ்வாறு கடலில் விடப்பட்டன.

(ஐ)

# பித்தளை, பிரம்பு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு திட்டம்!

கொழும்பு, ஏப். 01

இத்தாலி, கனடா மற்றும் ஜேர்மனி நாடுகளுக்கு களிமண், பித்தளை மற்றும் பிரம்பு தொடர்பான பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட தொழில் துறையினரின் பங்களிப்புடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். அத்துடன், இந்தக் கைத்தொழில்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக பெரமுன என்னையே தெரிவு செய்யவேண்டும்!

## திலித் ஜயவீர கூறுகிறார்



கொழும்பு, ஏப். 01

“பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக என்னையே தெரிவு செய்ய வேண்டும்” என மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர குறிப்பிட்டுள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற அவரின் கட்சியின் மாவட்ட மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பொதுஜன பெரமுன கட்சி பசில் ராஜபக்ஷவின் கட்சி அல்ல - நாமல் ராஜபக்ஷவின் கட்சி அல்ல. அது நாட்டை நேசிக்கும் 69 இலட்சம் மக்களின் கட்சி.

எமது நாட்டில் எந்த தேர்தல் நடத்த வேண்டுமென அமெரிக்க பிரஜையான பசில் தீர்மானிக்க அனுமதிக்க முடியாது.

மொட்டு கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் இல்லை என அமைச்சர் பிரசன்ன ரனதுங்க கூறியுள்ளார். நாட்டை நேசிக்கும் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மொட்டு கட்சியில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட நான் இருக்கிறேன் - என்றார். (ஐ)

# ஓடு மாற்ற கூரையில் ஏறியவர் உயிரிழந்தார்

கொழும்பு, ஏப். 01

ஓடுகளைப் பொருத்துவதற்காகக் வீட்டின் கூரைமீதேறிய முதியவர் சடலமாக மீட்கப்பட்டார்.

களுத்துறை - பாணந்துறை திப்பெத்த பகுதியில் வசிக்கும் 72 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மழையால் வீடு ஒழுகிய நிலையில் ஓடுகளை மாற்றுவதற்காக குறித்த நபர் கூரையில் ஏறியுள்ளார். நீண்ட நேரமாக அவர் கீழே இறங்கவில்லை.

இதைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் அவரைத் தேடி கூரையின் மீதேறியபோது அவர் உயிரிழந்து காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

# யுக்திய நடவடிக்கையில் 803 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப். 01

போதைப்பொருள் தொடர்பில் நேற்று நள்ளிரவு வரையான யுக்திய நடவடிக்கையில் 803 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளர்.

இவர்களுள் 40 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக் காக பொலிஸ் தடுப்பில் வைக்கப்படவுள்ளனர்.

மேற்கு மற்றும் தென் மாகாணங்களை மையப்படுத்தியே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வெளிநாட்டு துப்பாகியுடன் 21 வயது இளைஞர் கைது!

கொழும்பு, ஏப். 01

கம்பஹா ரயில் நிலையத்துக்கு அருகில் வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கியுடன் ரி - 56 வகை துப்பாக்க்கிகுப் பயன்படுத்தப்படும் 10 தோட்டாக்கள், 2.2 மில்லி மீற்றர் 7 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

21 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். கைதான நபரிடம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனையின் கீழ் மேலதிக நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# கல்முனை வடக்கு செயலகம்மீது அதிகார பயங்கரவாத நடவடிக்கை

## கஜேந்திரன் எம். பி. சாடல்

கல்முனை, ஏப். 01

**நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்பான வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான அதிகாரப் பயங்கரவாதம் நடத்துவது நீதிமன்றை அவமானப்படுத்தும் செயலாகும் - இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கூறியுள்ளார்.**

கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்துக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவது நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றச் செயல். அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமிறக்குவதற்கான செயல்பாட்டுக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவதும் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்ற ஆறாம் நாள் போராட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





# மனித நுகர்வுக்கு தகுதியற்ற உணவுப் பொருட்கள் சிக்கின

அக்கரைப்பற்று, ஏப். 01

சாய்ந்தமருதில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில் மனித நுகர்வுக்கு தகுதியற்ற பெருந்தொகை உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

புனித நோன்பு காலங்களில் சுகாதாரமற்ற சிற்றுண்டிகள் விற்பனையாகின்றன என்று கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவால் இரண்டாவது முறையாகவும் சோதனைகள் நடத்தப்பட்டன.

சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மனித நுகர்வுக்கு தகுதியற்ற பெருந்தொகை உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)



# போரைதீவுப்பற்றில் 7 கி. மீ. தூரம்! சிரமதானம் மூலம் துப்புரவாக்கல்!

மட்டக்களப்பு, ஏப். 01

பழுகாமம் பொது நுலகத்தில் ஆரம்பமாகி பட்டிருப்பு பாலம் வரைக்கும் 7 கிலோமீற்றர் தூரம்

போரதீவுப்பற்று பிரதேச சபையின் ஏற்பாட்டில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச சூழியக் கழிவு தினமான நேற்றுமுன்தினம் பொது மக்களுக்கு விழிப்புணர்ரைவ ஏற்படுத்தும் வகையில் இந்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமானின் ஆலோசனைக்கு அமைவாக போரதீவுப்பற்று பிரதே சசபை செயலாளர் எஸ். பகீரதனின் தலைமையில் இந்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பழுகாமம் பொது நூலகத்தில் ஆரம்பமாகி பட்டிருப்பு பாலம் வரைக்கும் 7 கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியோரங்கள் சிரமதானம் மூலம் துப்புரவுசெய்யப்பட்டன. (ஐ)

# 100 குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கல்

மட்டக்களப்பு, ஏப். 01

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காணி உறுதிகள் இல்லாத 100 குடும்பங்களுக்கு காணி உறுதிகள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கப்பட்டது.

பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில, இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபாலரெத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காணி அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்த மக்களில், இலுப்படிச்சேனை, வவுணதீவு, மகிழவட்டவான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 100 பேருக்கே காணி உறுதிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# கல்முனை பாடசாலையில் இப்தார் விருந்து நிகழ்வு!



கல்முனை, ஏப். 01

கல்முனை கல்வி வலய இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய வருடாந்த இப்தார் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ. ஜி. எம். றிசாத் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மார்க்க சொற்பொழிவை அல்ஹாபில் மௌலவி முஹம்மட் கியாஸ் நிகழ்த்தியதுடன் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் புனித ரமழான் சிந்தனையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனை நிர்வாக பிரதி கல்வி பணிப்பாளர் எம். எச். ஜாபீர், கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எம். ரம்சீன் பக்கீர், கல்முனை கோட்டக்கல்வி அதிகாரி யூ. எல்.எம். நியாஸ், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ. எல்.என்.ஹுதா உமர் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

திருகோணமலை, ஏப். 01

கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று திருகோணமலை - மொரவெவ பொலிஸார் தெரவித்தனர்.

போதைப்பொருள் விற்பனை தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்ட புலனாய்வு துறையினர் மொரவெவ பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைவாக சோதனைகளை மேற்கொண்ட போது குறித்த பெண் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

அந்தப் பிரதேசத்தை சேர்ந்த 38 வயது பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் பல வருடங்களாக கஞ்சா போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் என்றும் அவருக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதான பெண்ணிடம் இருந்து 52 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. அவரை சான்றுப் பொருளுடன் திருகோணமலை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கல்முனை வடக்கு விவகாரம் மெழுகுவர்த்தி ஏற்றி போராட்டம்!

கல்முனை, ஏப். 01

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து தமிழ் மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இரவு பிரதேச செயலகத்திற்கு முன்பாக திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், செ. கஜேந்திரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின்



அதிகாரங்கள் 30 வருடங்களாக தடுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வருகின்றன என்று தெரிவித்து அந்தப் பிரதேச மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். (ஐ)

ஈழநாடு





## சிரியா கார் குண்டுவெடிப்பு; 8 பேர் மரணம் 20 பேர் காயம்!

டமஸ்கஸ், ஏப். 01

துருக்கி எல்லையை ஒட்டிய சிரியா நாட்டின் அஜாஜ் நகரின் பிரபல சந்தை ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த காரில் நேற்று முன் தினம் திடீரென வெடிகுண்டு வெடித்தது. இதில், 8 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துக்கு எந்தவோர் அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் தலைமையிலான அரசுக்கு எதிராக, துருக்கி ஆதரவு பெற்ற குர்தீஷ் இன கிளர்ச்சியாளர் குழுவினர் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட சிரியாவில், இந்த நகரில் கடைசியாக 2 ஆண்டுகளுக்கு முன் கார் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அதன்பின்னர், நிலைமை அமைதியாக காணப்பட்டது.

இந்நிலையில், இந்த பகுதியில் குண்டுவெடிப்பு சம்பவம் ஏற்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகில் 5இல் 1 பங்கு உணவு விரயமாகிறது

### ஐ. நா. சபை அறிக்கை

நியூயோர்க், ஏப். 01


2022 ஆம் ஆண்டில் 5 இல் 1 பங்கு அளவில் உணவு விரயமானதாக ஐ. நா. வெளியிட்டுள்ள உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வீடுகளில் 63 கோடி தொன், உணவகங்களில் 29 கோடி தொன், சில்லறை கடைகளில் 13 கோடி தொன் என உலக அளவில் 105 கோடி தொன் உணவு விரயம் செய்யப்படுகிறது.

வீடுகளில் ஒரு நாளைக்கு 100 கோடி தொன் உணவுகள் வீணாகின்றன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உலக அளவில் வீடுகளில் ஒரு நாள் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்க முடியும்.

குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது. அதிக வெப்ப நிலையால், உணவை சேமித்து வைப்பது அங்கு சவாலாக உள்ளதால் விரயம் அதிகம் நிகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



இது குறித்து ஐ. நாவின் சுற்றுச்சூழல் திட்டப் பிரிவின் செயல் இயக்குநர் அண்டர்சன் கூறுகையில்,

“உணவு விரயம் என்பது உலக அளவில் நிகழ்ந்து வரும் துயரமான விடயம். இலட்சக் கணக்கான மக்கள் உணவின்றி பசியில் வாடும் சூழலில், உணவுகள் எந்தக் கணக்குமின்றி வீணாக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் சார்ந்தும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதில் ஆறுதலான விடயம், நாடுகள் நினைத்தால் உணவு விரயத்தை கட்டுப்படுத்த முடியும். எனவே, உலக நாடுகள் உணவு விரயத்தை கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டியது அவசியம்” என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெறுவதை உலக தலைவர்கள் விரும்பவில்லை!

### அமெரிக்க ஜனாதிபதி பைடன்

வாஷிங்டன், ஏப். 02

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற விட்டுவிடாதீர்கள் என உலகத் தலைவர்கள் தன்னிடம் வலியுறுத்தினர் என்று ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாடு உள்ளிட்ட சர்வதேச கூட்டங்களின்போது தலைவர்கள் தன்னிடம் இதைக் கூறினர் என்று பைடன் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நிகழாண்டு இறுதியில் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி பைடனும், குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டுவிட்டது.

இந்நிலையில், தேர்தல் நிதி திரட்டும் நிகழ்ச்சி நியூயோர்க் நகரில் அண்மையில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதிகள் பராக் ஒபாமா, பில் கிளிண்டன் ஆகியோரும் பங்கேற்ற இந் நிகழ்ச்சியில் ஜனாதிபதி



பைடன் பேசுகையில்,

ஜனாதிபதி தேர்தலில் தான் மீண்டும் தோற்றால் இரத்த ஆறு ஓடும் என ட்ரம்ப் பேசியிருக்கிறார். அவரின் பேச்சு மிகவும் கவலையைத் தருகிறது. இந்தியாவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாடாக இருக்கட்டும் அல்லது வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேச கூட்டங்களாக இருக்கட்டும் அதில் பங்கேற்ற ஒவ்வொரு தலைவரும் என்னை தனித்தனியாகச் சந்தித்து எனது கையைப் பிடித்துக் கொண்டு, ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற விட்டுவிடாதீர்கள். அவர் வெற்றி பெற்றால் தங்களது ஜனநாயகத்துக்கு ஆபத்தாக இருக்கும் எனக் கருதுகிறோம் எனத் தெரிவித்தனர். இதை மிகைப்படுத்திச் சொல்லவில்லை -என்றார்.

இந்தியாவில் ஜி -20 உச்சி மாநாடு கடந்த ஆண்டு செப்ரெம்பர் 9, 10 ஆம் திகதிகளில் நடந்தது. (ஐ)

## பாகிஸ்தானில் அணை கட்டும் பணிகளை நிறுத்தியது சீனா!

பெஷாவர், ஏப். 01

பாகிஸ்தானில் சீனர்கள்மீது நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலை அடுத்து அணைகள் கட்டும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தானில் 2 அணைகளின் கட்டுமான பணிகளில் சீனாவை சேர்ந்த நிறுவனம் ஈடுபட்டு வந்தது. இதில், ஆயிரத்து 250 சீனர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்தனர். இந்நிலையில் கடந்த வாரம் அவர்கள்மீது தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், 5 சீனப் பொறியியலாளர்கள் மற்றும் பாகிஸ்தானியர் ஒருவர் உயிரிழந்தனர். எனவே, அணைகட்டும் பணிகளை சீன நிறுவனம் நிறுத்திவிட்டது.

இதுகுறித்து பாகிஸ்தானைச் சேர்ந்த அதிகாரி கூறுகையில்,“தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து சீன ஒப்பந்த கட்டுமான நிறுவனம் 2 அணைகளின் கட்டமைப்பு பணிகளை நிறுத்தி வைத்துள்ளது. ஆயிரத்து 250 சீனர்கள் பணிபுரியும் இடங்களில் மீண்டும் வேலையைத் தொடங்குவதற்கு முன் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சீன அதிகாரிகள் வலியுறுத்தி உள்ளனர்.

அயலக தொழிலாளர்களை குறிவைத்து தாக்குவது இரு நாடுகளுக்கு இடையில் கவலையை அதிகரித்துள்ளது. இதனால் புதிய பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துமாறு பாகிஸ்தான் அரசிடம் சீன நிறுவனம் கோரியுள்ளது.

தாசு அணைத் திட்டத்தில் சுமார் 750 சீன பொறியியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அதேபோன்று, டயமர்பாஷா அணை கட்டுமானப் பணிகளில் 500 பேர் ஈடுபட்டுள்ளனர். இந்த தாக்குதலையடுத்து சீன பொறியியலாளர்கள் வசிக்கும் எல்லையை விட்டு வெகுதூரம் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன” என்றார். (ஐ)

## நெதர்லாந்தில் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் விடுவிப்பு

ஆம்ஸ்ரர்டாம், ஏப். 01

நெதர்லாந்தின் ஈத் நகரில் பணயக் கைதிகள் அனைவரும் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர் எனவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் அந்தநாட்டின் பொலிஸார் தெரிவித்தனர்.

நெதர்லாந்தின் ஈத் நகரில் உள்ள இரவு விடுதி ஒன்றில் நேற்று அதிகாலை 4 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இது பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் என அஞ்சப்பட்டது. அவர்களை மீட்க பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பல மணி நேர பரபரப்புக்கு மத்தியில் பணயக் கைதிகளில் நான்கு பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இதனிடையே, இந்த சம்பவத்தில் “பயங்கரவாத நோக்கம்” இருப்பதாக சந்தேகிக்க எந்த காரணமும் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கல்லெறிந்து கொல்லும் தண்டனை மீண்டும் அமுல்!

### தலிபான்கள் அறிவிப்பு

காபூல், ஏப். 01

விபசாரத்தில் ஈடுபடும் பெண்களை பொது இடங்களில் கல் எறிந்து கொல்லும் தண்டனை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வரும் நிலையில் அவர்கள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். குறிப்பாக பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் உள்ளன. இந்த நிலையிலேயே கல்லெறிந்து கொல்லும் தண்டனை மீண்டும் அமுலாக உள்ளது.

இதுகுறித்து தலிபான்களின் தலைவர் முல்லா ஹிபத்துல்லா அகுந்த்சாடா பேசுகையில்,

விபசாரத்துக்கான தண்டனையை விரைவில் அமுல்படுத்துவோம். விபசாரத்தில் ஈடுபடும் பெண்களுக்கு பொது வெளியில் கசையடி மற்றும் கல்லெறிந்து கொல்லும் தண்டனை வழங்கப்படும். தலிபான்களின் பணி காபூலை கைப்பற்றியதுடன் முடிவடையவில்லை. அது இப்போதுதான் தொடங்கியுள்ளது - என்றார். (ஐ)



# இறக்குமதியாகும் பொருட்களுக்கான வரி 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 01

**இறக்குமதி செய்யப்படும் பல பொருட்களுக்கான துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியை 10 வீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் மார்ச் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 10 சதவீத வரியை 6 சதவீதமாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி செய்யப்படும் குழந்தைகளின் பால்மா சிமெந்து, அப்பிள் உள்ளிட்ட பழங்கள் மற்றும் ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் வரி 6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், பாடசாலை உபகரணங்கள், எழுதுபொருட்கள், ஆடைகளுக்கான மூலப் பொருட்கள், வாகன உதிரி பாகங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் பாகங்கள் ஆகிய வற்றுக்கான துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

மருந்துகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், குளியலறை உபகரணங்கள், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக், அலுமினியம் மற்றும் மரப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரிகளை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்கலாம்!

## வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம்

கொழும்பு, ஏப். 01

அரசாங்கம் வரிச்சலுகை வழங்கினால் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உணவுகளுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளதால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி அதிகரிப்பால் வெதுப்பக தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விற்பனை குறைந்துள்ளது.

அரசாங்கம் சரியான வரிக் கொள்கையை பின்பற்றினால் வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியும் - என்று வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ஆசனவாய் மூலம் காற்றை செலுத்தியதில் ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 01

விளையாட்டாக ஆசனவாய் மூலமாக காற்று நிரப்பு இயந்திரம் மூலமாக காற்றை செலுத்தியதில் குடல் வெடித்து அவர் உயிரிழந்தார்.

களுத்துறை - பாணாந்துறையில் தனியார் பழுதுபார்ப்பு நிலையம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், பாணாந்துறை - அலுபோமுல்லையை சேர்ந்த தேஷான் மதுஷங்க என்ற 24 வயதுடைய இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல், அதே நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு ஊழியர்கள், உயிரிழந்த ஊழியரின் ஆசனவாயில் விளையாட்டாக காற்று நிரப்பும் இயந்திரத்தின் குழாயை பிடித்துள்ளனர்.

இதன்போது, குழாய் செருகுப்பட்டு, உடனடியாக அகற்ற முடியாமல் போனது. அத்துடன், அதிக அழுத்தத்தில் காற்று உட்செலுத்தப்பட்டதால் குடல் வெடித்து ஊழியர் உயிரிழந்தார்.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதான இருவரையும் மஹர நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கிணற்றில் விழுந்து குழந்தை பலி!

கொழும்பு, ஏப். 01

பலாங்கொடையில் இரண்டு வயது குழந்தை கிணற்றில் விழுந்து உயிரிழந்ததாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொட பிரதேசத்தை சேர்ந்த ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்து.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறார்களிடையே வைரஸ் காய்ச்சல்



கொழும்பு, ஏப். 01

சிறார்களுக்கு பரவி வரும் வைரஸ் காய்ச்சல் குறித்து சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படலாம் என கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நோய் உள்ள குழந்தைகளின் வாயிலும், கைகால்களிலும் சிறு கொப்பளங்கள் காணப்படும் . மேல் மாகாணத்தில்தான் இந்தநோய் பரவல் அதிகமாக காணப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் பொறுப்பாளிகள்மீது சுதந்திர - பாராட்சமற்ற சட்ட நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஏப். 01

ஈஸ்டர் தாக்குதலுக்கு பொறுப்புக் கூற வேண்டிய வர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சம் இன்றியும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்ட செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வரலாற்றில் மிக மோசமான பொருளாதார சவாலை எதிர்கொண்ட ஒரு நாடு என்ற வகையில், தாங்கிக் கொள்ளும் இயலுமை நிறைந்த தேசமாக ஆசிர்வாதத்துடன் உயிர்த்தெழ ஆரம்பித்திருக்கிறோம். பல்லின சமூகமாக வாழும் நாடு என்ற வகையில் இலங்கை தற்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்காக ஒன்றிணைந்து செயல்படுவது அவசியமாகும்.

எனவே, இலங்கையர்களாகிய நாம் எமது ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணுவதுடன், அதற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சக்திகளிடமும் சிக்கிக்கொள்ளாமல், அறிவுபூர்வமாக நாட்டின் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்காக எம்மை அர்பணிக்க வேண்டியது அவசியமாகும். தேசிய பாதுகாப்பு

இலங்கை கிறிஸ்தவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் ஈஸ்டர் காலம் ஒரு கொடூரமான தீவிரவாத தாக்குதலை கண்டிருந்தது. அந்த மோசமான நினைவுகள் எமது மனங்களில் இருந்து மறையாது.

அதேநேரம், அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சம் இன்றியும் சட்ட அமுல்படுத்துவதற்கான சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அத்துடன், இனிவரும் நாட்களில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் அர்ப்பணிக்கும் - என்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மத, இன முரண்பாடு எழலாம்!

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 01

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் மத, இன முரண்பாடுகள் தலைதூக்கலாம். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகாரத்தைப் பெறுவதற்காக பல்வேறு தரப்பினரும் சமூகத்தை பிளவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் மற்றும் சிங்கள இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தவும் பௌத்த இஸ்லாமிய அடிப்படையில் மோதலை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ரணவக்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது இன மதப் பிளவுகளை கட்டுப்படுத்தும் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதிக்கும் படையினருக்கும் உள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# தேசிய மருத்துவமனையின் நீர்தாங்கிகள் 20 வருடங்கள் சுத்தப்படுத்தப்படவில்லை!

கொழும்பு, ஏப். 01

கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதான நீர்த்தாங்கி உள்ளிட்ட நீர்த்தாங்கிகள் 20 வருடங்களாக சுத்தம் செய்யப்படவில்லை என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போது இந்த விடயம் வெளிகொணரப்பட்டிருந்தது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் தற்போது 161 நீர் தாங்கிகள் உள்ளன. சுமார் 20 வருடங்கள் இவை சுத்தம் செய்யப்படவில்லை. இந்த நீர்த்தாங்கிகள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் சுத்தம் செய்யப்பட்டமைக்கான எவ்வித சாட்சியமும் இல்லை.

சுகாதாரப் பரிசோதகர்கள் இதுதொடர்பில் கவனம் செலுத்தாமை குறித்து மருத்துவர் கவலை வெளியிட்டிருந்தார்.

பற்றீரியா அளவுகளை சரிபார்ப்பதற்கு வருடந்தோறும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (எம். ஆர். ஐ.) நீர் மாதிரிகள் அனுப்பப்படுகின்ற போதிலும் இவை மாத்திரம் நீரின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு போதாது என தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனையிலுள்ள நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நீரை பயன்படுத்துகின்ற நிலையில் அவர்கள் சுகாதார ரீதியான பாதிப்புகளை சந்திக்க நேரிடும்.

மேலும், இத்தகைய நீரின் பயன்பாட்டால் அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தும் உபகரணங்களும் பாதிக்கப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## பிரதிநிதிகள்...

இதனிடையே, இலங்கை - இந்திய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் பேசி வருகின்றனர்.

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையில் அமைக்கப்படவுள்ள இந்தப் பாலம் 23 கிலோ மீற்றர் நீளமானது. இதில் வீதி மற்றும் ரயில் பாதை என்பனவும் நிர்மாணிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதி...

அந்த அமைப்புகள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலும் அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறவிருக்கின்ற தருணத்தில்தான் எமது ஆட்சியாளர்களுக்கு தேர்தல் முறைமை மாற்றம் சம்பந்தமான சிந்தனைகள் வருகின்றன.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலையும் அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலையும் அரசமைப்புக்கு அமைவாக முன்னெடுக்க வேண்டும்.

தற்போது தேர்தல் முறைமை மாற்றம் என்பது அமைச்சரவையை பயன்படுத்தி நிறைவேற்று அதிகாரமுறையவர் தமது அதிகாரத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

பாராளுமன்றத்தை இரண்டரை ஆண்டுகளுக்கு பின்னர் கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கிடைக்கிறது. அதனடிப்படையில் தற்போதைய சூழலில் அவரால் எந்த நேரத்திலும் அவரால் பாராளுமன்றத்தினை கலைக்க முடியும். அவ்வாறு இல்லையேல் 2025 வரையில் கொண்டுசெல்லவும் முடியும்.

ஆனால், ஜனாதிபதி தேர்தல் அரசமைப்பின் பிரகாரம், செப்ரெம்பர் 17இல் இருந்து ஒக்ரோபர் 17க்குள் நடத்த வேண்டியுள்ளது. இருப்பினும் தற்போதைய ஆட்சியாளர்கள் எப்படியாவது அதனை நடத்தாது இருப்பதற்கு முயற்சிக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்களை ஆரம்பித்தும் உள்ளன. எவ்வாறாயினும், அரசாங்கத்தால் அரசமைப்பை மீறி தேர்தலை பிற்போட முடியாத நிலைமைகள் உள்ளது. ஆகவே, ஜனாதிபதி தேர்தல் எந்த காரணத்துக்காகவும் நடத்தாது கைவிட முடியாது - என்றார்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்கு இரண்டரை வருடங்கள் சென்றிருக்கின்றன.

ஐந்து வருடங்களாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதன் ஊடாக தேர்தல் முறைமையை மாற்றியமைக்க முடியும். எல்லை நிர்ணயம் தொடர்பான முடிவுகளுக்கு அரசியல் கட்சிகளால் இணக்கம் தெரிவிக்க முடியாத நிலைமைகளும் ஏற்படும்.

இவ்வாறான நிலையில் பாராளுமன்ற தேர்தல் முறைமையை மாற்றி அமைப்பதற்கான எல்லை நிர்ணயம் பூர்த்தி செய்யப்படாவிட்டால் பாராளுமன்ற தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்படும். அவ்வாறில்லையாயின், சுயாதீனமாக பாராளுமன்றத் தேர்தலை பிற்போடும் முயற்சியாகவும் அமையலாம்.

எனினும், அரசமைப்புக்கு அமைவாக இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்தியேயாக வேண்டும். அதனை பிற்போடுவதற்கு எந்தவிதமான காரணங்களையும் கூற முடியாது. ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கான வழிகள் எவையும் இல்லை - என்றார்.

(ஐ)

# தமிழர்கள் பொது வேட்பாளரை போட்டியிட வைக்கக்கூடாது!

### வஜிர அபேவர்த்தன

கொழும்பு, ஏப். 02

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைப் போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியே தீருவார். அவர் மூவின மக்களின் ஆதரவுடன் அந்தத் தேர்தலில் வெற்றியடைந்து ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து நீடிப்பார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கத் தமிழ்க் கட்சிகள் ஆலோசிக்கின்றனர். வடக்கிலுள்ள சில தமிழ்க் கட்சிகள்தான் இதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

தமிழ் பொதுவேட்பாளராக யார் களமிறங்கினாலும் அவர் வெற்றியடையமாட்டார் என்பதை தமிழ்க் கட்சிகள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

எனினும், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் களமிறக்கினால் அங்குள்ள மக்களின் வாக்குகள்தான் சிதறடிக்கப்படும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன்.”- என்றார்.

(ஐ)

# கடன்களை ஜூலைக்கு முன் மறுசீரமைக்க வேண்டும்!

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 01

வெளிநாட்டு அரசமுறை கடன்களை எதிர்வரும் ஜூலை மாதத்துக்குக்குள் மறுசீரமைக்காவிடின் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். பஷிலின் ஆலோசனைக்கு அமைய செயற்படுவதா? அல்லது நாட்டை ஸ்திரப்படுத்துவதா ? என்பதை ஜனாதிபதியே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை குறிப்பிட்டதற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு மேல் நீதிமன்றம் நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. ஞானசார தேரரை பயன்படுத்தி சிங்கள - முஸ்லிம் இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்தவர்கள் இன்று சுதந்திரமாக உள்ளார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் திட்டமிட்ட வகையில் இன முரண்பாடுகள் உருவாக்கப்பட்டன. அதனை ஒரு தரப்பினர் தங்களின் குறுகிய அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு சற்று ஸ்திரநிலையடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.



ஆனால், தற்போதைய முன்னேற்றம் நிலையானதாக அமைய வேண்டும். பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

வெளிநாட்டு அரசமுறை கடன்கள் எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் மறுசீரமைக்க வேண்டும். இல்லையேல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும் - என்றார்.

(ஐ)

## சகல...

அணியினர், பொதுஜன பெரமுன வின் பாராளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது.

ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் இந்தக் கூட்டணி ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கவுள்ளது. அத்துடன், தற்போதைய அரசாங்கத்தில் பதவி வகிக்கும் அமைச்சர்கள் குழு ஒவ்வொன்றும் எமது கூட்டணியில் இணைவதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளது. அது தொடர்பிலான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை விடவும் சிவில் அமைப்புகளும் தொழில்சங்கங்களும் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகும் நாளில் கைகோக்கவுள்ளன. இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையானது ஜே. ஆர். ஜெயவர்த்தன நிலையத்திலும் அதன் பின்னர் கூட்டணி அறிமுக நிகழ்வானது எதிர்க்கட்சித் தலைவர் பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

எவ்வாறாயினும், அரசியல் இலாபங்களுக்காக செயல்படுபவர்களையும் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களையும் கட்சியில் இணைத்துக்கொள்ள நாம் தயாரில்லை. எமது கொள்கைகளுடன் இணக்கம் வெளியிட்டு கட்சியில் இணைய விரும்புபவர்களையே இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

இதேநேரம், எதிர்வரும் மே தினத்தில் நகர சபை மண்டபத்தில் கூட்டத்துக்கான ஏற்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது இலங்கை வரலாற்றில் அதிகளவு மக்கள் பங்கேற்ற கூட்டமாக பதிவாகும். இந்த மே தினத்தன்றும் எமது கூட்டில் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர் - என்றும் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

# யுக்திய நடவடிக்கையின் மூலம் சிறு குற்றவாளிகளுக்கே வலை!

### தேசிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஏப். 01

யுக்திய நடவடிக்கை சிறு குற்றவாளிகளுக்கு மட்டுமே வலை அமைத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பீட உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் உண்மையான “யுக்திய” நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். அனைத்து போதைப் பொருள் வியாபாரிகள், மோசடி செய்பவர்கள் மற்றும் குற்றவாளிகள் இதனை மனதில் கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் கடத்தல் நேரடியாக அரசியலுடன் தொடர்பு கொண்டுள்ளது. பாதாள உலக கலாசாரமும் அரசியல்வாதிகளால் தமது சொந்த நலன்களுக்காக வளர்க்கப்படுகின்றது” - என்றார்.

(ஐ)

## பொதுச்...

தேசியக் கூட்டணியில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொ து வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் கொள்கையளவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## துன்னாலையில்...

குற்றச் சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் அனைவரும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

(ஐ)

## பலத்த...

322 விசேட அதிரடிப் படையினர் 2 ஆயிரத்து 746 முப்படைகளை சேர்ந்தவர்கள் விசேட பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## தமிழ்அரசு...

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் என்று வருகின்றபோது அதில் யார், யார் வேட்பாளர்கள் என அறிவிக்கப்படுகின்றபோது நாங்கள் உரிய சந்திப்புகளை மேற்கொண்டு முடிவைத் தீர்மானிப்போம்.

“இவ்வாறான நிலைமையில்தான் தேசிய மக்கள் சக்தியினர் எம்மைச் சந்திக்கப் போவதாகச் சொல்லியுள்ளனர். எனவே, எம்மைச் சந்திக்க வருகின்ற எல்லோரையும் நாங்கள் சந்திப்போம்.” - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழ் கட்சிகளுக்கு உரித்து உண்டு!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்



கொழும்பு, ஏப். 01

**தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவது தொடர்பில் எமக்கு ஆட்சேபனைகள் எதுவும் இல்லை. அதற்கான சகல உரித்துக்களும் அவர்களுக்கு உள்ளது - என்று உத்தர லங்கா கூட்டணி தலைவரும் எம். பியுமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமது கூட்டணியின் சார்பில் கருத்து வெளியிட்ட அவர் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தலில் உத்தர லங்கா கூட்டணியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படவுள்ளார். இந்தத் தீர்மானத்தை எடுத்தமைக்கு காரணம், தற்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள சஜித்துக்கும் அநுரவுக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை. இதே போன்று தான் ரணில் விக்கிரமசிங்க இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்காவிட்டாலும் அவரும் போட்டியிடுகிறார் என்றே அவருடைய தரப்பினர் கூறுகின்றார்கள்.

ஆகவே, மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது அவர்கள் ஒரே நிலைப்பாடுகளை உடையவர்களாகவே உள்ளனர். ஆகவேதான் எமது கூட்டணியின் சார்பில் வேட்பாளரை களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

# மோட்டார் சைக்கிள் - பஸ் விபத்து ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

மட்டக்களப்பு, ஏப். 01

மோட்டார் சைக்கிளும் தனியார் பேருந்தும் மோதுண்ட விபத்தில் குடும்பஸ்தர் பலியானார். மற் றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் மாவடிவேம்பு பிரதேசத்தில் பாதசாரிகள் கடவைக்கு அண்மையாக நேற்று ஞாயிற்றுக் கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் சென்ற முறக்கொட் டாஞ்சேனை பிரதேசத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய தங்கராசா ஜெயம் என்ற கூலித்தொழிலாளி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கூலித் தொழிலாளியான அவர் தென்னந்தோட்டம் ஒன்றின் உரிமையாளருடன் அவரின் மோட்டார் சைக்கி ளில் சென்று தேங்காய்கள் பறித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ)

# பிரதேச செயலக உத்தியோகத்தர்க்கு மாதாந்தம் விசேட ஊக்கத்தொகை!

கொழும்பு, ஏப். 01

பிரதேச செயலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு விசேட மாதாந்த ஊக்கத்தொகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பிரதேச செயலாளர் ஒருவருக்கு 15,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும். மேலும் உதவி பிரதேச செயலாளர், உதவி இயக்குநர் மற்றும் கணக்காளர் பதவிகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த ஊக்கத்தொகை மார்ச் முதல் டிசெம்பர் வரையிலான 10 மாத காலத்துக்கு வழங்கப்படும். இந்த கொடுப்பனவுகளை செலுத்துவத ற்கு தேவையான ஒதுக்கீடு, இந்த வருடத்தில் பரவலாக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்தை நடைமுறைப்படுத்த தற்போது ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டின் நிர்வாகச் செலவுகளில் இருந்து செய்யப்பட வேண்டும் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# பல்வலி என்று மருத்துவமனை சென்ற யுவதி திடீர் மரணம்!

கொழும்பு, ஏப். 01

பல்வலி பொறுக்க முடியாமல் மருத்துவ மனையில சேர்க்கப்பட்ட யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தறை - மொரவக்க - பரகல பிரதேசத்தில் வசித்து வந்த ஹன்சிகா நவரத்ன என்ற 29 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்தார்.

பல்கலைக்கழக படிப்பை முடித்த இவர் ஒரு வருடத்துக்கு மேலாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் பற்களில் ஏற்பட்ட வலி காரணமாக தெனியாய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

# ஊடகதூது மடல் 2ஆவது வெளியீட்டு விழாவில் மூத்த ஊடகவியலாளர் தில்லைக்கு விருது!

யாழ்ப்பாணம், ஏப். 01

ஊடகத் தூது மடல் இரண்டாவது வெளியீட்டு விழாவும், "ஊடகவியல் கற்போம் - தமிழ் கத்தோலிக்கச் செய்தி" லங்கா இணைய யூ -ரியூப் தள திறப்பு விழாவும் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். கொழும்புத்துறை பீச் றோட்டில் அமைந்துள்ள பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரறில் ஊடகத் தூது மடலின் பிரதம ஆசிரியர் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊடகத் தூது விருது வழங்கலும் நடைபெற்றது.



இதன்போது ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் வடமராட்சி மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடகத் தூது மடலின் 2024 ஆம் ஆண்டுக்கான ஊடகத் தூது விருது வழங்கப்பட்டது.

# கட்சி பதவியிலிருந்து சிலகாலம் ராஜபக்ஷக்கள் விலகவேண்டும்!

கொழும்பு, ஏப். 01

கட்சி பதவிகளில் இருந்து சிறிது காலம் ராஜபக்ஷக்கள் விலக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் கூடிய சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று சபையில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இதையும் மீறி நாமல் ராஜபக்ஷவுக்கு தேசிய அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மது அருந்தும் போட்டியில் வென்றவர் உயிரிழந்தார்!

ஹற்றன், ஏப். 01

மது அருந்தும் போட்டியில் குறைந்த நேரத்தில் அதிக மது அருந்திய மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

நுவரெலியா - ஹற்றன் - லெடண்டி தோட்டத்தின் - மார்ல்பிராய் பிரிவை சேர்ந்த கணேசன் ராமசந்திரன் (வயது 38) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த மார்ச் 27ஆம் திகதி தோட்டக் கோவிலின் தேர்த் திருவிழா நடைபெற்றது. இதில், கலந்துகொண்ட குழுவினர் சிலர் அதிக மது அருந்துபவர் யார்? என்ற போட்டியை நடத்தினர்.

மூன்று பேர் பங்கேற்ற இந்தப் போட்டியில் 750 மில்லி லீற்றர் மது போத்தல்கள் மூன்று அவர்களுக்கு வழங்கப்பட்டது. குறைந்த நேரத்தில் அதனை யார் குடித்து முடிக்கிறார்களோ அவரே வெற்றியாளர் என்று கூறப்பட்டது.

இதை ஏற்ற அவர்கள் மது அருந்தியுள்ளனர். இதில், உயிரிழந்த நபர் வெற்றியீட்டினார். அத்துடன், அவர் போட்டிக்கு முன்னதாகவும் மது அருந்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

போட்டி முடிந்த பின்னர் வீட்டுக்கு சென்ற அவர் உணவருந்திவிட்டு நித்திரைக்கு சென்றுள்ளார். தூக்கத்திலேயே அவர் மறுநாள் காலை உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனையில் அவருக்கு நிமோனியா காய்ச்சல் காணப்பட்டதாகவும் தொண்டையில் உணவு அடைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, போட்டியில் பங்கேற்றவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# மசாஜ் நிலையத்துக்கு சென்றவர் திடீர் மரணம்!

கொழும்பு, ஏப். 01

மசாஜ் நிலையத்துக்கு சென்ற நபர் ஒருவர் உயிரிழந்தார். திடீர் சுகவீனம் காரண மாகவே அவர் உயிரிழந்தார் என்று கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தெகிவளை - மஹரகம பிர தான வீதியில் அம்பில்லவத்தை சந்திக்கு அருகில் உள்ள மசாஜ் நிலையத்தில் நடந்த இந்த சம்பவத்தில் பன்னிபிட்டியை சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

மாரடைப்பு காரணமாக குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கேட்டு கல்முனையில் நேற்று போராட்டம்

கல்முனை, ஏப். 01

கல்முனை திரு இருதயநாதர் ஆலயம் முன்பாக கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி நேற்று போராட்டம் ஒன்றை நடத்தினர்.

ஈஸ்டர் திருநாளான நேற்று ஆராதனையை தொடர்ந்து இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

போதகர் கிருபைராஜா தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதன்போது, பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஊழலில் சுருட்டினாரா?



**மறவன்புலவு க. சச்சிதானந்தன்,
(சிவசேனை)**

தமிழில் திறன் உள்ளவர் தீரன். பெயருக்கேற்ற திறன், எனவே சிங்களத்தில் திரான். ஆங்கில வரிவடிவில் Tiran.

எல்லாம் , யுடடஇ யுடடநள. இலத்தீனில் இருந்து வந்த யேர்மனியப் பெயர் Alles. எல்லாம் தெரிந்தவர் அனைத்தும் புரிந்தவர் என்ற பொருளில். அமெரிக்கா வில் 100 பெயர்களுள் ஒரு பெயர் Alles.

Tiran Alles கொழும்பில் பெரிய முதலாளி. Apogee Group, Communication & Business Equipment Company, Ceylon Newspapers (Pvt) Ltd. எனத் தொழில் முனை வோராய்ப் பணத்தில் மிதப்பவர்.

பல நாடுகளில் ஊழல் புள்ளிகளை அடையாளம் காட்டிய அமைப்பு Pandora papersஇல் திரான் பற்றிய பின்வரும் குறிப்பு.

….Sri Lanka's public security minister, Tiran Alles, is the first sitting Sri Lankan minister to be identified in the International Consortium of Investigative Journalists' Pandora Papers data trove as having offshore holdings.

பிரித்தானியாவில் இவரின் Brompton Properties Ltd. மற்றும் Banham Ventures Ltd, இரண்டுமாகப் பிரபுக் கள் வாழும் இடங்களில் அரண்மனை வீடுகளை வைத்திருப்பதாக Pandora Papers கூறும்.

63 வயதில் இலங்கையின் உள் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

இலங்கையின் வரலாற்றை ஆழ்ந்து படித்தவரோ? திரான் அலசர். மகாவமிசத்தைக் கரைத்துக் குடித்த வரோ திரான் அலசர். தீபவமிசம், அட்டகதை ஆகிய நூல்களைக் கற்றுத் துறை போகியவரோ? திரான் அலசர்? சமந்த பாசா தீபிகை, மகாவமிச தீகை, குலவ மிசம், சாசனவமிசம் ஆகிய நூல்கள் அவருக்கு மனப்பாடம்.

எனவே, வெடுக்கு நாறி மலை, அநுராதபுர காலப் புத்த கோயில் எனக் கூசாமல் பொய் சொல்கிறார் திரான் அலசர். ஓராண்டுக்கு முன்பு வரை அங்கு சிவன் கோயிலே இருக்கவில்லை எனப் புரட்டுகிறார் திரான் அலசர்.

Brompton Properties Ltd. மற்றும் Banham Ventures Ltd. தொடர்பான புரட்டுகளையும் பொய்களையும் ஊழல்களையும் உலக அரங்கே பேசுகிறது. இவரோ வரலாற்றுப் பொய்களையும் புரட்டுகளையும் இங்கு பேசுகிறார்.

**இலங்கை சிவ பூமி**

அநுராதபுரப் புத்த காலம் மகிந்தருடன் தொடங் கும். மகிந்தருக்கும் சங்கமித்திரைக்கும் எந்த உறவும் அசோகனுடன் இல்லை. அசோகனின் கல்வெட்டுகளில் இலங்கைக்கு அவர்களை அனுப்பிய செய்தி எங்கும் இல்லை.

அசோகனுக்கு முன்பே புத்த சமயத்தை நாகர்களும் இயக்கர்களுமான தமிழர் பின்பற்றத் தொடங்கினர்.

தைப்பூச நாளில் கதிர்காமத்தில் மாணிக்கக் கங்கைக் கரை ஓரத்தில் சைவ சமயப் பெருவிழா. முருகனுக்குத் திருவிழா. நடத்திக் கொண்டிருந்த உரோகணத்து அரசன் மாலநாகன். இலங்கையில் உள்ள இயக்கர்களும் நாகர்களும் பெருந்திரளாகக் கூடியிருந்தனர்.

காவடி ஆடிக்கொண்டிருந்தனர். மாவிளக்குச் சுட் டுக் கொண்டிருந்தனர். தேனும் தினை மாவும் படைத் துக் கொண்டிருந்தனர். முருகப் பெருமானை வழிபட் டுக் கொண்டிருந்தனர். நான் சொல்லவில்லை. மகாவ மிசம் சொல்கிறது. மாகாநாமர் சொல்கிறார்.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும், அன்பும், அறனும் என்ற வரிகளைப் பாலையாழ்ப் பண்ணில் பாடினர். ஈழத்தவரான கண்ண நாகனார் அமைத்த இசைக்கேற்ப ஆடினர். இவை சங்க காலப் பரிபாடல் வரிகள். இன்று தேவாரம் திருவாசகம் போல அன்று நாகர்களுக்கும் இயக்கர்களுக்கும் முருகன் மீது பரிபாடல் வரிகள். கடுவன் இளவெயினனார் இயற்றிய வரிகள்.

அக்காலம் புத்த சமயம் இலங்கையில் இல்லை.



இலங்கை முழுவதும் சைவ சமயமே சமயம். இலங்கை சிவபூமி. நான் சொல்லவில்லை. மகாவமிசம் சொல்கி றது. மகாநாமர் சொல்கிறார்.

பொய்களையும் புரட்டுகளையும் பேசி ஊழலில் சுருட்டி உருட்டிக் கொண்டிருந்தோருக்கு இந்தச் செய்தி தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில் அவர்கள் மகாநாமரின் மகாவமிசத்தைக் கரைத்துக் குடித்த புலமையாளர்.

தைப்பூச நாளில் புத்தர் வந்தார்
..அநேகசாதி சம்சாரம் சந்தா விசுசம் அநிப்பிசம்
கககாரகம் கவேசந்தோ துக்கா சாதி புனப்புனம்
கககாரகா திட்டோசி புனகேகம் நகாகசி
சப்பா தேபாசுகா பக்கா கககூடம் விசங்கிதம்
விசங்கார கதம் சித்தம் தண்கானாம் காயம்
அச்யங்கா..

புத்தர் கூறிய வரிகள். பாளி மொழி வரிகள். பிராகிருத வரிவடிவ வரிகள்.

மனிதர் உய்ய வழி தெரிந்தது. பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய நோய்களை ஒழிப்பதற்கு வழி பிறந்தது. அறிவாகிய சூரியனை ஆசை என்ற முகில் மறைத்ததும் தெரிந்தது.

…தோற்றம் சார்பின் மூப்புப் பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலை கை ஆறு எனத்
தவலில் துன்பம் தலைவரும் என்ப..
(மணிமேகலை 30 ஆம் காதை வரி 115-117)

எண்ணற்ற பிறவிகளை எடுத்தேன். இந்த உடலைக் கட்டியவனைத் தேடினேன். பிறவி துக்கமே. உடலைக் கட்டியவனே நீ தொடர்ந்து உடலைக் கட்ட முடியாது. பிறவி எனக்கு ஒழிந்தது. ஞான ஒளி பிறந்தது. என் சித்தம் என் வேட்கையைக் களைந்தது.

கயாவில் அரசு மரத்தின் கீழ் புத்தர் இவ்வாறு தனக்குத் தானே கூறினார்.

புத்தர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்த காலத்தில் இலங்கைத் தீவில் நாகர்களும் இயக்கர்களும் அருளும், அன்பும், அறனும் இரந்தனர். முருகனிடம் இரந்தனர். இயற்கையை வழிபட்டனர். பாம்பை வழிபட்டனர். வேம்பை வழிபட்டனர். சிவனை வழிபட்டனர். முரு கனை வழிபட்டனர். சிவனுக்கும் முருகனுக்கும் திருக் கோயில்கள் அமைத்திருந்தனர்.

புத்தரின் வரலாற்றை நன்கு அறிந்தோருக்கு இச் செய்திகள் நன்றாகத் தெரிந்திருக்கும். மேற்கூறிய மணிமேகலைக் காப்பியத்தின் வரிகளையும் அவர்கள் படித்திருக்கலாம் அல்லவா?

போர்த்துக்கேயர் தந்த பெயரையும் தமிழர் தந்த பெயரையும் இணைத்துத் தனக்குக் கொண்டவர் அல்லவா? எனவேயே சொல்கிறார் வெடுக்குநாறி மலை அநுராதபுர காலத்தைச் சேர்ந்தது என! அவரை விடக் கற்றறிந்தவர் யார் இருக்க முடியும்?

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கண்ணோட்டத்துடன், மக்கள் நடுவே எடுத்துக் கூற, புத்தர் காசிக்கு செல்கிறார். கங்கைக் கரைக்குச் செல்ல வில்லை. சிவன் கோயிலடிக்குச் செல்லவில்லை. சற்றே தொலைவில் மான்கள் வாழ்கின்ற சாரங்க நாதர் கோயில் அருகே இருக்கிறார்.

மக்கள் கூட்டம் எங்கிருக்கிறதோ, அங்கு செல்லார். தொலைவில் இருப்பார். தன் கருத்தைச் சொல்வார். மக்கள் கூட்டத்தில் தகுதியுள்ள ஒரு சிலரையாவது தன் பக்கம் ஈர்ப்பார். புத்தர் பெருமானுக்கு இப்பேராற்றல். காசியில் அறுபது சீடர் குவிந்தனர்.

ஊர்வெளியில் சடில பார்ப்பனர்களின் வேள்வி. புத்தர் தொலைவில் இருக்கிறார் வேள்விக்கு வந்தோர் சிலர் அவரிடம் வருகின்றனர். புத்தரின் கருத்துகளில் மயங்குகின்றனர். வேள்விக்குச் செல்லாமலே அவரோடு தங்குகின்றனர். வேள்வித் தலைவரான சடில பார்ப்பனர் காசியப்பர் தேடி வருகிறார். அவரையும் புத்தரின் கருத்துகள் ஈர்க்கின்றன. வேள்வியைக் கலைக்கின்றனர். புத்தரோடு சேர்கின்றனர்.

இலங்கையில் மாணிக்கக் கங்கைக் கரையில் தைப் பூசப் பெருவிழா. முருகனுக்குத் திருவிழா. அங்கேயும் புத்தர் வருகிறார். தை மாதத்து முழுநிலா நாளில் புத்தர் வருகிறார். தன் கருத்துக்களை ஒரு சிலருக்குச் சொல்கிறார். கூட்டம் எங்கே இருக்கிறதோ, வேள்வி எங்கே நடக்கிறதோ, திருவிழா எங்கு நடக்கிறதோ, அங்கே புத்தர் செல்வார், தொலைவில் இருப்பார், மக்களைக் கவர்வார். தன் கருத்துக்களைச் சொல்வார்.

அநுராதபுர காலத்துக்கு முன்பே புத்தரின் கருத்துக் களை இலங்கை மக்கள் ஏற்றுக் கொண்டனர். தெற்கே தைப்பூச விழாவில் ஏற்றனர். ஆனாலும் சைவ வழிபாடு களை, மரபுகளை, அருந் தமிழை, இசையை, ஆடலை அவர்கள் கைவிடவேயில்லை.

சித்திரையில் புத்தர் வந்தார்
போர்க்களத்துக்குப் போவதும் போரை நிறுத்துவதும் புத்தரின் மற்றும் ஒரு பரப்புரை உத்தி.

ஆற்று நீருக்காக உறவுக்கார அரசர் இருவர் கபிலவத்துவில் போரிட முயன்றனர். புத்தர் கபிலவத்து விரைந்தார், தன் கருத்துகளைச் சொன்னார், போரை நிறுத்தினார்.

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் மாணிக் கக் கல் அரியணைக்காக மகாநாகனும் குலநாகனும் போரிட முழங்கினர். போர்க் களத்திற்குப் புத்தர் வந்தார். சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் முழுநிலா நாளில் புத்தர் வந்தார். கபிலவத்துவில் எதைக் கூறினாரோ அதையே யாழ்ப்பாணத்திலும் கூறினார். போரிட முழங்கிய மகாநாகனும் குலநாகனும் புத்தரின் அறிவுரையை ஏற்றனர்.

இந்தச் செய்தியை மகாவமிசத்துக்கு முன்னரே மணிமேகலை விரித்துக் கூறும். (மறுபக்கம் பார்க்க)

விரிந்திலங்கு அவிரொளி சிறந்து, கதிர் பரப்பி,
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழநிலம் அகன்று,
விதிமாண் ஆடியின் வட்டம் குயின்று,
பதுமசதுர மீமிசை விளங்கி,
‘அறவோற்கு அமைந்த ஆசனம்’ என்றே,
நறுமலர் அல்லது பிறமரம் சொரியாது,
பறவையும் முதிர்சிறை பாங்குசென்று அதிராது,
தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை,
பிறப்பு விளங்கு அவிரொளி அறத்தகை யாசனம்,
கீழ்நில மருங்கின் நாகநாடாளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி
எமதீ தென்றே எடுக்கல் ஆற்றோர்
தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்து
தம்பெரும் சேனையொடு, வெஞ்சமர் புரிநாள்,
‘இருஞ்செரு ஒழிமின் எமதீது’ என்றே
பெருந்தவ முனிவன் இருந்தறம் உரைக்கும்,
(மணிமேகலை, 8 மணிபல்லவத்துத் துயறுற்ற காதை, வரி 44-61)

மகாநாகனும் குலநாகனும் வழிபட்ட கோயில் வெடுக்குநாறி மலைச் சிவன் கோயில். மகாநாகனும் குலநாகனும் வழிபட்ட கோயிலே குருந்தூர் மலையின் நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர் ஆதி சிவன் கோயில்.

மகாநாகனும் குலநாகனும் வழிபட்ட எட்டுப் பட்டை கொண்ட சிவலிங்கம் (தாராலிங்கம்) இப் பொழுதும் குருந்தூர் மலையில் உள்ளது. அங்கிருந்த நந்தியம் பெருமானின் திரு உருவத்தைத் தாம் கண்டதாக ஆங்கிலேயர் J. Penry Lewis குறிப்பு எழுதிவைத்துப் போனாரே.

வெடுக்குநாறி மலை அநுராதபுரக் காலப் புத்தர் கோயில் எனவும் கடந்த ஆண்டு வரை சிவன் கோயில் அங்கு இருக்கவில்லை எனவும் சொல்பவர் யார்? மகா நாகன், குலநாகன், சித்திரை முழு நிலா நாளில் புத்தர் வருகை, போர்க்களம், இவற்றை விளக்கமாகக் கூறும் மகாவமிசத்தை நன்றாகப் படித்துக் கரைத்துக் குடித்த துணை உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரான் அலசர் அல்லவா?

அநுராதபுரத்து மூத்த சிவன்

திருவள்ளுவருக்கு 250 ஆண்டுகளுக்கு முன். அநு ராதபுர அரசு. பாண்டியன் அபயனின் மகன் பாண்டியன் மூத்த சிவன். பெயரிலேயே சிவனைக் கொண்டவன். இலங்கை சிவபூமி என ஆண்டவன். மனைவி பொன் முகலி. மக்கள் உதயசிவன், மகாசிவன், சூரதீசசிவன், அசேல சிவன்.

அநுராதபுரத்துக்கு வடக்கே அருள் பாலிக்கும் சிவன் கோயில்கள். வெடுக்குநாறி மலையில் ஒன்று. குருந்தூர் மலையில் மற்றது. மூத்த சிவனின் வழிபடு தெய்வங்கள் வெடுக்குநாறி ஈச்சரர், குருந்தூர் ஈச்சரர்.

மகாவமிசத்தைக் கரைத்துக் குடித்தோருக்கு இவை நன்றாகத் தெரிந்த செய்திகள். ஆனாலும் பொய்களை யும் புரட்டுகளையும் ஊழல்களையும் அவிழ்த்து விடுவ தால் கடந்த ஆண்டுக்கு முன்பு அங்கு சிவன் கோயிலே இல்லை என்கின்றனர்.

அநுராதபுர அரசன் மூத்த சிவன் தனியாகவா இச் சிவன் கோயில்களுக்குப் போனான்? அல்ல அல்ல, தன் இல்லத்தவரையும் அழைத்துச் சென்றான். அரச வாரிசுக ளான தன் மகன்களையும் அழைத்துச் சென்றான்.

அந்த மகன்களுள் ஒருவனே பிற்காலத்தில் தேவனாம் பியதீசன் என அசோகனின் பெயரை ஏற்றான், புத்தரையும் ஏற்றான்.

வடக்கு வெடுக்குநாறி மலையில் சிவன் வழிபாட்டு டன் குருந்தூர் மலையில் சிவன் வழிபாட்டுடன் புத்தரையும் ஏற்றுக் கொண்டவன் தேவனாம் பியதீசன்.

சிவபழிபாட்டைக் கைவிட்டுப் புத்த சமயத்தை ஏற்றுக் கொண்டவன் அல்லன். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற அக்கால நடைமுறை. சிவ வழிபாடு தொடர்ந்தது. இலங்கை சிவபூமியே. அதேசமயம் புத்தரின் வழிகாட்டல்களையும் ஏற்றனர் - மிகச்சில அரசர்களும் மிகச்சில குடிமக்களும்.

புத்த விகாரங்கள் இல்லாத காலம். நாகரின் சைவக் கோயில்கள், இயக்கரின் சைவக் கோயில்கள் புத்தரின் தங்குமிடங்கள். பிச்சை எடுத்தே உண்ணவேண்டும். பிச்சை, பிட்சை, பிக்கு எனப் புத்த பிக்குகளுக்கான விதி. மக்களிடை பிச்சை எடுப்பதும் சைவக்கோயிலை அண்டி உண்போரே உறங்குவோரே புத்த பிக்குகள்.



வெடுக்குநாறிச் சிவன் கோயில் பாறையில் 2000 ஆண்டுக்கு முந்தைய தமிழி வரிவடிவ வரிகள். புத்த பிக்குகள் இங்கு உறங்கலாம் என்ற வரிகள். இன்றும் அவற்றைக் காணலாம்.

சைவர்களான அநுராதபுர அரசர்


சூரன், சேனன், குடிகன், எல்லாளன், கல்லாட நாகன், பாண்டிய மாறன், பிள்ளை மாறன், சோழ நாகன், கயவாகு, மாமல்லநாகன் எனத் தொடர்ச்சியாக அனுராதபுரத்தை ஆண்டவர்கள் அனைவரும் சைவ சமயத்தவரே. பாண்டிய சோழத் தொடர்புடையவரே. தமிழரே, சைவரே.

திருவள்ளுவருக்கு 330 ஆண்டுகளுக்கு பின்பு அநுராதபுரத்தில் புத்த சமயத்தை வலிமையாகக் கடைப் பிடித்த மேகவண்ணன் என்ற ஒரே ஒரு அரசனைத் தவிர, ஏனையோர் சைவ சமயத்தவரே.



இந்தச் செய்திகளை நான் சொல்லவில்லை. மகா நாமர் எழுதிய மகாவமிசம் சொல்கிறது. திறமையையே பெயராகும் கொண்ட அமைச்சர் திரான் அலசர் இவற்றைப் படித்திருப்பார், கரைத்துக் குடித்திருப்பார். ஆனாலும் பொய்களும் புரட்டுகளும் ஊழல்களும் அவருக்குக் கைவந்த கலை என்பதால் கடந்த ஓர் ஆண் டுக்கு முன்பு வரை வெடுக்கு நாறியில் சிவன் கோயில் இருக்கவில்லை என்கிறார்.

குருந்தூர் மலையில் எட் டுப்படை இலிங்கத்தில் எழுதி யுள்ள தமிழி வரிகள் அவை சிவன் கோயில் என்கின்றன. அந்த இலிங்கத்தை இப் பொழுது அங்கு அமைத்த புத்த விகாரத்தின் உச்சியில் வைத்திருக்கிறார்கள், புத்தக் கட்டடக்கலை வடிவமைப்புக்கு முரணாக.



தமிழர்களும் சைவர்களும் போரில் தோல்வியுற்ற தால் அடிமைகள் என்று நினைப் பில் புத்தர்களுள் மிகச் சிலரே புத்த மேலாதிக்க வாதிகள் ஆகின்றனர். எனவே புத்த விகாரங்களைத் தாம் நினைத்தவாறு, தாம் நினைத்த இடத்தில், ஆட்சியைப் பயன்படுத்தி அமைத்து வருகின்றனர்.

900 ஆண்டுகளுக்கு முன்பு கஜினி முகமது சோப நாதர் கோயிலை இடித்தான், கொள்ளையடித்தான். இன்று சோமநாதர் கோயில் பொலிவுடன் அருள் பாலிக்கிறதே!

700 ஆண்டுகளுக்கு முன் மாலிக் கபூர் படையெடுத் தால் அறுபது ஆண்டுகள் முகமதியர் ஆட்சியில் மதுரை. இராமநாதபுரத்தின் பெயர் இலாலாபாத் ஆனது. மீண்டும் இராமநாதபுரம் ஆகவில்லையா? 25 ஆண்டுகள் மறைந்திருந்த ஆலவாய் அப்பனும் அங்கயற்கண்ணியும் மீண்டும் பொலிவுடன் அருள் பெருக்கவில்லையா? 16 ஆண்டுகள் மறைந்திருந்த தில்லை நடராஜர் பொன்னம் பலத்தில் புகழ் பரப்ப வில்லையா? பல ஊர்கள் தாண்டி கரந்துறைந்த அரங்கநாதர் மீண்டும் திருவரங்கத்தில் திகழ்ந்து அருள் பெருக்கவில்லையா?

500 ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தியில் இராமர் கோயிலை பாபர் இடித்தான், மசூதி கட்டினான். இன்று அயோத்தியில் இராமர் கோயில் ஒளிவீசி அருள் பாலிக்கிறதே!

400 ஆண்டுகளுக்கு முன்பு திருக்கேதீச்சரம் திருக் கோயிலை சுவடுகளே இல்லாமல் கத்தோலிக்கர் இடித்துத் தரைமட்டமாக்கி னார்களே. இன்று அங்கு அழகான திருக் கோயில் அமைந்திருக்கிறதே! அருள் பெருக்குகிறதே!

போர்கள் வெற்றியைத் தரும் அல்லது தோல்வியைத் தரும். 2009 போரில் வெற்றி பெற்றோம் எனக் கொழும்பு அரசு மார்தட்டி வெற்றி விழாக் கொண்டாடுகிறது.

வெற்றி நிலையானதன்று. தோல்வியும் நிலையானது அன்று.

கஜினி முகமது, மாலிக் கபூர், பாபர், இடீ இலீவரா, அவுரங்கசீப் வரிசையில் திரான் அலசர் பெயரும் இணைந்து விடக்கூடாது.

போரில் வெற்றி பெற்றவர் பெருந்தன்மையாக நடந்து கொள்வார்கள் என்பதற்கு மாமன்னன் அலெக் சாண்டர் சிறந்த எடுத்துக்காட்டு. இரண்டாம் உலகப் போர் இறுதியில் அமெரிக்க - யப்பான் உடன்பாடு, அமெரிக்க - யேர்மன் உடன்பாடு எடுத்துக்காட்டுகள்.

அந்த எடுத்துக்காட்டுகளைப் பின்பற்றச் சிங்கள புத்த அரசியல் தலைவர்கள் பலர் முயன்றாலும் சரத் வீரசேகரர், விதுர விக்கிரமநாயக்கர், திரான் அலசர், விமல் வீரவன்சர் போன்ற இடக்கரடக்கிகள், புத்தரின் பெயரைச் சொல்லித் துவராடை அணிந்து (புத்தராய்ச் சில புனைத்துகில் அணிபவர் என்பார் ஞானசம்பந்தர்) புத்தரின் கொள்கைகளுக்கு வேட்டு வைக்கும் புத்த பிக்குகள் சிலர், வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டைக் கட்டி எழுப்புவதா? வேட்டு வைத்துத் தகர்ப்பதா? என்பன வினாக்கள். வேட்டு வைத்துத் தகர்ப்போம், நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூ ண்டுவோம் என்ற போக்கில் பொய்கள் புரட்டுகள் உருட்டுகள் மிரட்டல்கள் எனத் தொடர்கிறார்கள்.

வெற்றி நிலையானது அல்ல. தோல்வியும் நிலையானது அல்ல. அன்பும் அறனும் அருளும் அறிவும் என்றென்றும் நிலையானது.